இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 178 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 25 – வியாழக்கிழமை 08 பிப்ரவரி 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 178 : Thiruvalluvar Year - 2055 - Thai 25 - Thursday 08 February 2024 - Dak 12 Pages ₹ 5.00




### ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் - சாதனைப் பயணமாக அமைந்தது !

# தமிழ்நாட்டிற்கு ரூ.3,440 கோடி புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு!

## சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல் !





தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

**சென்னை, பிப். 8-**

**ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு ரூ.3,440 கோடி புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு எனவும், இந்தப் பயணம் சாதனைப் பயணமாக அமைந்திருந்தது என்றும் சென்னை திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

உங்கள் வாழ்த்துகளை எல்லாம் பெற்று ஸ்பெயின் நாட்டுக்குச் சென்ற நான் தமிழ்நாட்டுக்குப் பல்வேறு முதலீடுகளை ஈர்த்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அந்த வகையில் இது மிகப்பெரிய சாதனைப் பயணமாக அமைந்திருக்கிறது.

**ஸ்பெயினில் பங்கேற்ற தொழில்துறை நிர்வாகிகள்!**

தமிழ்நாட்டில், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டுக்கு கடந்த ஜனவரி 29ஆம் தேதி சென்றேன். முதல் நிகழ்வாக, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் பங்கேற்கும் முதலீட்டாளர் மாநாடு நடந்தது. அதற்கு ஸ்பெயின் நாட்டில் இருக்கின்ற பல்வேறு தொழில்துறை குழும நிர்வாகிகள் எல்லாம் வந்திருந்தார்கள்.

- ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள்
- ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள்
- இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களை சந்தித்தேன்.

தமிழ்நாட்டில், தொழில் தொடங்குவதற்கு இருக்கக் கூடிய உகந்த சூழல் பற்றி அங்கே எடுத்துச் சொல்லி, நம்முடைய மாநிலத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். அதன் தொடர்ச்சியாக, அடுத்தடுத்த நாட்களில் ஸ்பெயின் நாட்டில் செயல்படுகின்ற முன்னணி நிறு வனங்களுடைய நிர்வாகிகளை தனித்தனியாக நேரில் சந்தித்து கலந்துரையாடினேன்.

**முக்கிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்!**

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். சில முக்கிய நிறுவனங்களின் பெயர்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

1. காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் மறுசுழற்சியிலும் முன்னணி நிறுவனமான ஆக்சியானா நிறுவனம்
2. உயர்தர வீட்டுக் கட்டுமான பொருட்களின் உற்பத்தியிலும், பீங்கான் பொருட்கள் உற்பத்தியிலும் உலகின் முன்னணி நிறுவனமான ரோக்கா நிறுவனம்
3. கண்டெய்னர் முனையங்கள் மற்றும் சரக்கு பூங்காக்களை அமைப்பதில் சிறந்த நிறுவனமான ஹபக்-லாய்டு நிறுவனம்
4. சர்வதேசத் தரத்தில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை அமைக்கக்கூடிய அபர்ட்டிஸ் நிறுவனம்
5. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமாக இருக்கின்ற கெஸ்டாம்ப் நிறுவனம்
6. இரயில்வே சார்ந்த உற்பத்தி தொழிலில் உயர் தொழில் நுட்பத்துடன் செயல்படக்கூடிய டால்கோ நிறுவனம்
7. பொறியியல் வடிவமைப்பு மற்றும் பொறியியல் கல்வித் திறன் பயிற்சிக்கான நவீன கருவிகளை உற்பத்தி செய்கின்ற எடிபன் நிறுவனம்
8. உயிரியல் ஆராய்ச்சி மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனமான மேப்ட்ரீ நிறுவனம்

- ஆகிய நிறுவனங்களின் நிர்வாகிகளை எல்லாம் நான் சந்தித்தேன். இந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் எல்லோரும் தங்களுடைய தொழில் திட்டங்களை விளக்கியும், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தங்களுடைய ஆர்வத்தையும் தெரிவித்தார்கள்.

இந்த முயற்சிகளின் பயனாக, 3,440 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. ஹபக் லாய்டு நிறுவனம் - 2500 கோடி ரூபாய் முதலீடு.
2. எடிபன் நிறுவனம் - 540 கோடி ரூபாய் முதலீடு.
3. ரோக்கா நிறுவனமும் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக உறுதியளித்திருக்கிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

**நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை ! பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், சிரித்தேன் !**

**செய்தியாளர் :** *நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பார்த்தேன். படித்தேன். ரசித்தேன். சிரித்தேன். ஏனென்றால், பி.ஜே.பி. தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல attack செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இது தான் புரியாத புதிராக இருக்கிறது.

---

### கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தலைமையில்

## ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து டெல்லியில் மாபெரும் போராட்டம்!

### மாநிலங்களுக்கான நிதி பகிர்வை பாரபட்சமின்றி வழங்கிடக்கோரி முழக்கம் !

புதுடெல்லி, பிப். 8-

ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கர்நாடக மாநில அரசு சார்பில் முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் டெல்லி ஜந்தர் மந்தரில், நிதி கேட்டு போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்களுக்கான நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவதாக கூறி, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில், கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார், பிரியங்க் கார்கே உள்ளிட்ட கர்நாடக அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டன. அப்போது செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, கர்நாடக மக்களின் உரிமை நிலை நாட்டப்படும் என நம்புவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் எங்களது போராட்டத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செவி சாய்க்கும் என நம்புகிறேன். கன்னடர்கள் மற்றும் கர்நாடக மாநிலத்தின் உரிமை நிச்சயம் நிலைநாட்டப்படும் என்றும் கூறினார்.

கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் - கூறுகையில் எங்களது உரிமைக்காகவே நாங்கள் போராடுகிறோம் . ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் எங்களுக்கு 13% மட்டுமே கிடைக்கிறது. நிதி பகிர்வில் குஜராத் போன்ற மாநிலங்கள் பயன் அடைகின்றன. அதுகுறித்து நான் பேசவில்லை. தமிழ்நாடு, தெலுங்கானா, மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு உரிய நிதியை வழங்கிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**கர்நாடக காங்கிரஸ் எம்.பி.க்கள் போராட்டம்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்களுக்கான நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவதாக கூறி, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே, கர்நாடக காங்கிரஸ் எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

---

### "உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம்" முகாம் நடைபெறும் இடம் குறித்து

## ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதிக்குள் அறிவித்திடுக !

### மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவு !

*சென்னை, பிப். 8-*

*உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம் முகாம்கள் நடத்துவது குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதிக்குள் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.*

*மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தை அண்மையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து ஆட்சியர்கள் மூலம் செயல்படுத்தி வருகிறார்.*

*"உங்களை தேடி, உங்கள் ஊரில்" முகாம் இனிமேல் ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை நடத்தப்பட வேண்டும் என்று அரசு அறிவித்து உள்ளது.*

*இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், ஜனவரி முதல் டிசம்பர் வரை ஆண்டு முழுவதும் அனைத்து தாலுகாக்களும் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில், ஆண்டின் தொடக்கத்தில் ஒரு ஆண்டிற்கான அட்டவணையை மாவட்ட கலெக்டர் வரைய வேண்டும் என்றும் கூட்ட நெரிசலைத் தவிர்க்க போதிய முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு தெளிவுபடுத்தி உள்ளது.*

*முகாம் நடைபெறும் நாளில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகள், தாங்கள் செல்லும்போது தாலுக்காவில் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட வேண்டும்.*

*மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அலுவலர்கள், மனுக்களை உரிய முறையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த முகாம்கள் நடத்துவது குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதம் 5ந்தேதிக்குள் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

---

### ரூ.3,440 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன !

## தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு !

### தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி !

*சென்னை, பிப். 8-*

*தொழில் முதலீடுகள் ஈர்ப்பு நடவடிக்கையின் வெற்றியை தொடர்ந்து, தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த மிக சிறப்பான அறிவிப்புகள் விரைவில் வெளிவரும் என தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.*

*சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாட்டில் தொழில் துறை வரலாறு காணாத மிகப்பெரிய வளர்ச்சியை கண்டு வருவதாகவும், உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் 6.66 லட்சம் கோடி அளவிற்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். முதலமைச்சரின் ஸ்பெயின் பயணம் மூலம் 3 ஆயிரத்து 440 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு குறிப்பாக நான் முதல்வன் திட்டம் மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு குறித்த மிக சிறப்பான அறிவிப்புகள் விரைவில் வர உள்ளதாகவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 08-02-2024

# 400 பா.ஜ.க.வும் - 370 பா.ஜ.க.வும்

400 இடங்களைக் கைப்பற்றுவோம் என்று நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. சொல்லிக் கொள்ளட்டும்!

370 இடங்களை பா.ஜ.க. மட்டும் தனித்து கைப்பற்றும் என்றும் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. சொல்லிக் கொள்ளட்டும்!

இப்படி ஒருவர் சொல்லிக் கொள்வதை யாரும் தடுக்க முடியாது. உண்மையில் வெற்றி பெறப் போகிறவர்கள் யாரும், இப்படி சொல்ல மாட்டார்கள். வென்று காட்டுவார்கள். ஆனால் 400 என்றும் 370 என்றும் அவர் சொல்லிக் கொள்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கிறது.

ஒன்று - இப்படிச் சொல்லி தனது மனதைத் தானே தேற்றிக் கொள்கிறார். இரண்டு - 400, 370 என்று சொல்லி பா.ஜ.க. மீது ஒரு பொய்யான பிம்பத்தைக் கட்டமைக்கப் பார்க்கிறார்கள். தனது மனதுக்கு தானே ஆறுதல் சொல்லிக் கொள்வதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், 400,370 என்பது மாயப் பிம்பம் என்பதை அம்பலப்படுத்தியாக வேண்டும். கள நிலவரம் பா.ஜ.க.வுக்குச் சாதகமாக இல்லை என்பதே உண்மையாகும்.

2019 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக மோடி ஆட்சிக்கு வந்தார். அதன் பிறகு அவரது போலியான பிம்பம் கிழியத் தொடங்கிவிட்டதை பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் காட்டிக் கொடுத்துவிட்டன.

**2019 ஆம் ஆண்டில்..**

**★ ஆந்திரா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**★ ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.**

**★ மகாராஷ்டிராவில் ஆட்சிக் கலைப்பு, சிவசேனா உடைப்பு என்று கூட்டணி ஆட்சியில் இருக்கிறது பா.ஜ.க.**

**2020 ஆம் ஆண்டில்..**

**★ டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.**

**★ பீகாரில் பா.ஜ.க. கூட்டணியை நிதிஷ் முறித்து, ஆர்.ஜே.டி.யுடன் ஆட்சியை அமைத்தார். பின்னர் அவர்களை விட்டு விலகி மீண்டும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கிறது.**

**2021 ஆம் ஆண்டில்..**

**★ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**★ கேரள சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**★ மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**2022 ஆம் ஆண்டில்...**

**★ பஞ்சாப் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி**

**★ இமாசலப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி**

**2023 ஆம் ஆண்டில் ...**

**★ கர்நாடகா மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**★ தெலுங்கானா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**★ மிசோரம் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

- இதுதான் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் நிலைமை ஆகும். எதை வைத்துக் கொண்டு 400, 370 என்கிறார் மோடி?

சிக்கிம் - புதுச்சேரி - நாகலாந்து - மேகாலயா - திரிபுரா - ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. அங்கு பா.ஜ.க. கட்சி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவானதுதான்.

அருணாசலப்பிரதேசம் - அரியானா- அசாம் - கோவா - உத்தரகாண்ட் - மணிப்பூர் - உத்தரப்பிரதேசம் - குஜராத் - சட்டீஸ்கர் - மத்தியப்பிரதேசம் - ராஜஸ்தான் - ஆகிய மாநிலங்களில் 2019 முதல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. வென்றுள்ளது. இதில் உத்தரப் பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகியவை மட்டும்தான் பெரிய மாநிலங்கள் ஆகும். மற்றவை அனைத்தும் சிறிய மாநிலங்கள். பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்?

பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் உ.பி., ம.பி., குஜராத், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களை மொத்தமாகச் சேர்த்தாலே 160 நாடாளுமன்றத் தொகுதிகள் தான். பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்?

இன்றைக்கு இந்தியாவின் மிக முக்கியமான பெரிய மாநிலங்களை பா.ஜ.க. அல்லாத கட்சிகள்தான் ஆள்கின்றன. தமிழ்நாடு - டெல்லி - பஞ்சாப் - மேற்கு வங்கம் - கர்நாடகா ஒரிசா - கேரளா - ஆந்திரா - ஆகிய மாநிலங்களை எதிர்க்கட்சிகள்தான் வைத்துள்ளது. பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்? எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பா.ஜ.க.வின் நிலை பரிதாபத்துக்குரியது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

**★ தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள்**

**★ டெல்லியிலும் பஞ்சாபிலும் ஆம் ஆத்மி**

**★ மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ்**

**★ மகாராஷ்டிராவில் சிவசேனாவும், தேசியவாத காங்கிரஸும்**

**★ உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாடி**

**★ பீகாரில் ஆர்.ஜே.டி.**

**★ காஷ்மீரில் பரூக் அப்துல்லாவும், மெகபூபா முக்தி**

**★ ஜார்கண்டில் முக்தி மோர்ச்சா**

ஆகிய பலமான மாநிலக் கட்சிகள் இந்தியாக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. இந்த மாநிலங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு 400 இடங்களை எப்படி பிடிக்க முடியும்? காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போன்ற அகில இந்தியக் கட்சிகள் இக்கூட்டணிக்குள் உள்ளன.

கடந்த முறை உ.பி., மகாராஷ்டிரா, பீகார், குஜராத், கர்நாடகா, மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், ஜார்கண்ட் ஆகிய 9 மாநிலங்களில் அதிகம் வாங்கியதால் பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தது. 234 நாடாளுமன்றத் தொகுதிகளை இந்த 9 மாநிலங்களில் இருந்து பெற்றது பா.ஜ.க. இம்முறை பீகார், மகாராஷ்டிரா, கர்நாடகா, மேற்கு வங்கம் ஆகிய நான்கு மாநிலங்களும் கை கொடுக்காது.

மறுபடியும் உ.பி., ம.பி., குஜராத், ராஜஸ்தானுக்குதான் பா.ஜ.க. அடங்கப் போகிறது. உ.பி.யில் சமாஜ்வாடி - காங்கிரஸ் ஆகிய கட்சிகளை எதிர்கொள்ள வேண்டும். மற்ற மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் வலுவாக இருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. வென்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் 10 லட்சம் பேர் தான். சட்டீஸ்கரில் 6 லட்சம் வாக்குகள்தான். மத்தியப் பிரதேசத்தில் 35 லட்சம் வாக்குகளை கூடுதலாக பா.ஜ.க. பெற்றுள்ளது. 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் இணைந்து போட்டியிட்டு இருந்தால், இந்த வெற்றியை பா.ஜ.க. பெற்றிருக்க முடியாது.

2022-ல் நடைபெற்ற குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வாங்கிய வாக்குகள் 1,67,07,957 மட்டுமே. பா.ஜ.க.வுக்கு எதிராக நின்றவர்கள் வாங்கிய மொத்த வாக்குகள் 3,23,81,808 ஆகும். ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிட்டது. 41 லட்சம் வாக்குகளைப் பெற்றது. 12.92 சதவிகித வாக்குகளைப் பெற்றது. காங்கிரஸும் ஆம் ஆத்மியும் இப்போது ஒரே அணியில் இருக்கின்றன.

இவை எதுவும் தெரியாதவர்கள் தான் பிரதமர் சொல்வதற்கு தலையாட்ட முடியும். இது எல்லாம் பிரதமருக்குத் தெரியும். அதனால்தான் நாடாளுமன்றத்தில் 'இந்தியா' கூட்டணியைப் பற்றியே அவர் புலம்பிக் கொண்டிருந்தது ஆகும்.

# ஸ்பெயின் நாட்டு மக்களுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

**சென்னை, பிப்.8-**

**ஸ்பெயின் நாட்டுப் பயணம் முடித்து தாய்த் தமிழ்நாட்டுக்கு புறப்படுவதையொட்டி நேற்று முன்தினம் மாலை 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதாவது :-**

ஸ்பெயின் நாட்டு மக்களுக்கு எனது நன்றிகள்!

ஸ்பெயின் பயணத்தை முடித்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வருகிறேன்.

மறக்க முடியாத இனிய நினைவுகளை ஸ்பெயின் நாட்டினரும், அங்குள்ள தமிழர்களும் அளித்தனர்.

ஸ்பெயின் நாட்டில் தமிழர்களைச் சந்தித்தது; எனது நினைவுகளின் பொக்கிஷமாக இருக்கும்.

பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஸ்பெயின் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்!

இவ்வாறு தமது 'எக்ஸ்' பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (06.02.2024) தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து தாயகம் திரும்பினார். திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்கள் உடன் உள்ளார்கள்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொகுதி மேம்பாட்டு நிதியில்

# திருவல்லிக்கேணி நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டிடங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 8 -

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் (TUCS) மூலம் திருவல்லிக்கேணி, ஜானி பாட்சா தெருவில், செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி 3 மற்றும் 4 நியாயவிலைக் கடைகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை நேற்று முன்தினம் (06.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் (TUCS) மூலம் திருவல்லிக்கேணியில் இயங்கி வந்த திருவல்லிக்கேணி 3 (02 NC031SC) மற்றும் திருவல்லிக்கேணி 4 (02 NC032SC) ஆகிய நியாவிலைக் கடைகள் வடகை கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இந்தப்பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கட்டடம் திருவல்லிக்கேணி, ஜானி பாட்சா தெருவில் கட்டப்பட்டுள்ளது.

இந்த நியாயவிலைக் கடைகளின் மூலம் வின்.என்.தாஸ் தெரு, மோகன் தாஸ் தெரு, களிமண்புரம், செல்ல பிள்ளையார் கோயில் தெரு, நைனியப்பன் தெரு, பாடர் தோட்டம், பாரதி சாலை, பைகிரப்ஸ் ரோடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2385 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள். இதன் மூலம் இந்த பகுதி மக்கள் தங்கள் வசிக்கும் இடத்தின் அருகாமையிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெறுவது எளிதாகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர் / கூடுதல் முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், நிலைக்குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டலக் குழுத் தலைவர் (ம) 114வது வட்ட மாமன்ற உறுப்பினர் எஸ்.மதன் மோகன் உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சொந்த யூடியூப் சேனல் உருவாக்குதல் - யூடியூப் சேனலைப் பயன்படுத்தி

# தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் குறித்த மூன்று நாள் பயிற்சி!

## தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு - புத்தாக்க நிறுவனம் வழங்குகிறது!

*சென்னை, பிப்.8 -*

*தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், உங்களது சொந்த யூடியூப் சேனலை உருவாக்குதல் மற்றும் இணையதளத்தில் யூடியூப் சேனலை பயன்படுத்தி உங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி வரும் 10.02.2024 முதல் 12.02.2024 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.*

*இப்பயிற்சியில் தொழில் முனைவோர் யூடியூப் சேனலை உருவாக்குவது எப்படி, வீடியோ மற்றும் ஸ்லைடு ஷோ உருவாக்கம், சமூக ஊடக சந்தைப்படுத்தல், சமூக ஊடகங்களை இணைத்தல், வாடிக்கையாளர் நெட்வொர்க்கை எவ்வாறு அதிகரிப்பது, பயனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு ஆன்லைன் மார்க்கெட்டிங் மற்றும் விதிகள் ஆகியவற்றை விரிவாக விளக்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம்.*

*இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.*

*தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 44-22252081/22252082, 8668102600 / 86681 00181 / 7010143022.*

*இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*




2024 மக்களவைத் தேர்தலையொட்டி தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி, முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், அரசு தலைமை கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எழிலன் நாகநாதன், ஏ.கே.எஸ்.விஜயன், சென்னை மேயர் பிரியா ஆகிய 11 பேர் கொண்ட குழுவினர் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார், சேடப்பட்டி மு.மணிமாறன், கம்பம் ராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசி ரவிக்குமார், மகாராஜன் பூமிநாதன் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள், வியாபாரிகள், மாணவர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துக்களை நேரடியாக கேட்டு மனுக்களை பெற்றனர்.

# கழக அரசு மீது உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு நம்பிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த நிறுவனங்கள் மட்டுமில்லாமல், மற்ற நிறுவனங்களும் அடுத்தடுத்து எதிர்காலத்தில் தங்களுடைய முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியை நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள்.

உற்பத்தித் துறையில் சீனாவுக்கு மாற்றாக, இந்தியா கருதப்பட்டு வரும் இந்த வேளையில், அந்த உற்பத்தித் துறையில் முந்திச் செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு முன்னேறி வருவதையும், பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகள் பல தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அந்தச் செய்தி சுட்டிக்காட்டி இருக்கிறது.

**தமிழ்நாடு அரசை பாராட்டி "நியூயார்க் டைம்ஸ்" கட்டுரை!**

இந்தியா பயணிக்கக் கூடிய பாதையில், முந்தி பயணிப்பது மட்டுமல்ல, தமிழ்நாடு தனக்கென்று தனிப்பாதை ஒன்றை வகுத்துச் செயல்பட்டு வருவதாகவும், முதல் பக்கத்தில் "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது. அதை பாராட்டியும் இருக்கிறது. இது போன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி செயல்பட வைக்கிறது.

தமிழ்நாட்டை தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிக பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இது போன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **“தமிழ்நாட்டை தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிக பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இது போன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”**

**செய்தியாளர்:** தற்போது நீங்கள் வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டு வரும்போது முதலீடுகள் அதிகளவு ஈர்க்கப்படுகிறது. இதற்கு அடுத்த கட்டமாக முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வேறு நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** திட்டமிடும்போது உங்களிடம் சொல்லிவிட்டு செய்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் இப்போது நெருங்கி வருவதால், அதற்குப் பிறகுதான் என்னுடைய பயணங்கள் இருக்கும்.

**பி.ஜே.பி. எதிர்க்கட்சியாக இருப்பதுபோல் பிரதமர் உரை நிகழ்த்தியது புரியாத புதிர்!**

**செய்தியாளர்** : நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பார்த்தேன். படித்தேன். ரசித்தேன். சிரித்தேன். ஏனென்றால், பி.ஜே.பி.தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல attack செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

**செய்தியாளர்** : பிரதம மந்திரி பேசும்போது 400 இடங்களை நாடாளுமன்றத் தேர்தலில் கைப்பற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார் அதுபற்றிய தங்களது கருத்து?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மொத்தம் 400 தானா? 543 இடங்கள் இருக்கிறது. அதையும் கைப்பற்றுவேன் என்று சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

**மக்களுக்கு தொண்டாற்ற யார் அரசியலுக்கு வந்தாலும் மகிழ்ச்சி!**

**செய்தியாளர்:** நடிகர் விஜய் அரசியல் கட்சித் தொடங்கி இருக்கிறார்? எப்படி பார்க்கிறீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** : மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

---

நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில் - காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில்

## புதிய கட்டிடங்களுக்கான அடிக்கல் - கல்வெட்டுகள்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தனர்!

### பல்வேறு திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்!

காஞ்சிபுரம், பிப்.8-

முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, நேற்று முன்தினம் (06.02.2024) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பல்வேறு கட்டிடங்களுக்கான அடிக்கல் கல்வெட்டினை நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் திறந்து வைத்து, நடைபெற்றுகொண்டிருக்கும் பல்வேறு திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாநகராட்சி 36.14 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கியது ஆகும். இப்பகுதியின் தற்போதைய மக்கள் தொகை 2,76,360 ஆகும். இந்நகரம் கோயில் நகரமாக உள்ளதாலும், வெளிமாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் இந்நகருக்கு வருகை புரிகின்றனர். இந்நகரம் பட்டு வளர்ச்சியிலும் ஈடுபட்டுள்ளதால் தோராயமாக தினசரி ஒரு இலட்சம் மக்கள் வந்து செல்லக்கூடிய நகரமாகவும் உள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து இன்று காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மஞ்சள் நீர் கால்வாய் பகுதியில் மூடுகால்வாய் அமைத்தல் பணியானது ரூ. 40 கோடி மதிப்பீட்டிலும், அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் ரூ. 8.77 கோடி மதிப்பீட்டில் அமைக்கவும், ரூ. 1.2 கோடி மதிப்பீட்டில் பிள்ளையார் பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணியை மேற்கொள்ளவும், மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடங்கள் ரூ. 10 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.59.97 கோடி மதிப்பீட்டிலான கட்டிடங்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மற்றும் குடிநீர்வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஆகியோர் புதியதாக கட்டப்படவுள்ள கட்டிடங்களுக்கான அடிக்கல் கல்வெட்டினை திறந்து வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நேரு மார்க்கெட் கட்டும் பணிக்காக தாயார்குளம், அண்ணா நகர் பகுதியில் வேகவதி ஆற்றில் பாலம் பணிக்காக ரூ.5 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் இராஜாஜி மார்க்கெட்டினையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வினை தொடர்ந்து, காரபேட்டை பகுதியில் புதியதாக அமைக்கப்படவுள்ள காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கான இடத்தினை நேரில் சென்று, பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம். மகாலட்சுமி யுவராஜ், அலுவலர் செ.வெங்கடேஷ், துணை மேயர் குமரகுருநாதன் பங்கேற்றனர்.

---

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு

## காணி பழங்குடி மகளிர் குழுவிற்கு ரூ.25 லட்சம் புத்தொழில் நிதி!

### மதிப்புக் கூட்டப்பட்ட மலையகத் தேன் விற்பனை மூலம் கன்னியாகுமரி மாவட்ட பழங்குடி மக்களை முன்னேற்றும் மகத்தான சாதனை!

சென்னை, பிப்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு தமிழ்நாடு எஸ்.சி. / எஸ்.டி. புத்தொழில் நிதித் திட்டம் மூலம் கன்னியாகுமரி மாவட்டம் காணி பழங்குடி மகளிர் குழுவின் தேன் விற்பனைக்காக ரூ.25 இலட்சம் வட்டியில்லாக் கடன் வழங்கியது.

இந்த ரூ.25 லட்சம் நிதி உதவி மூலம் காணி பழங்குடி மகளிர் குழு நாஞ்சில் காணி மகளிர் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தை நடத்துகிறது.

இந்த நிறுவனம் பழங்குடி மக்களிடம் இருந்து தேன் மற்றும் மிளகு ஆகியவற்றின் கொள்முதலை அதிகரிக்கவும், விற்பனைக்காக அதன் பேக்கேஜிங் பிரிவு ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

காணி பழங்குடி மகளிர் குழு, தற்போது இஞ்சி, மிளகு, முருங்கை ஆகியவற்றின் மணம் வீசக்கூடிய, தனித்துவமான மதிப்புக் கூட்டப்பட்ட தேன் விற்பனையை ஒரு சிறிய வாடிக்கையாளர் தளத்தின் மூலம் செய்துவருகிறது.

மேலும், இணையதளத்தின் மூலம் (THROUGH ONLINE PORTAL) இந்த தேன் விற்பனையை அதிகரித்திடவும் ஆவன செய்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியின் உதவியால், பழங்குடி இன மக்களிடம் இருந்து தேன், இஞ்சி, மிளகு முதலியவற்றின் கொள்முதலை அதிகரித்தும் விற்பனையைப் பெருக்கியும் ஒட்டுமொத்த பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காணி பழங்குடி மகளிர் குழு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நன்றியுடன் போற்றி வருகிறது.

---

நாடாளுமன்றத் தேர்தல் 2024 “நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு”

## சேலம் மாவட்டத்திற்கு பிப்ரவரி 11ஆம் தேதி வருகை!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு

நாமக்கல், பிப். 8-

நாடாளுமன்றத் தேர்தல் 2024 “நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு” சேலம் மாவட்டத்திற்கு (பிப்ரவரி 11ஆம் தேதி) வருகை தர உள்ளது.

இது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவானது கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க உள்ளார்.



அதன்படி (பிப்ரவரி 11ஆம் தேதி) காலை 10.00 மணிக்கு சேலம், ரேடிசன் ஹோட்டலிற்கு (Radisson Hotel) வருகை தர உள்ளனர். எனவே நாமக்கல் நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம், தமிழ்நாடு கோழி பொருட்கள் ஏற்றுமதி சங்கம், லாரி உரிமையாளர்கள் சங்கம், லாரி ஓட்டுனர் சங்கம், லாரி பாடி பில்டர் சங்கம், பால் உற்பத்தியாளர்கள் சங்கம், விசைத்தறி நெசவாளர்கள் சங்கம், விவசாய முன்னேற்ற சமூக சங்க கூட்டமைப்பு, பழங்குடியினர் நல மக்கள் மற்றும் வளர்ச்சி சங்கம், சிறு, குறு விவசாயிகள் சங்கம், வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், தொழில் முனைவோர், தொழிற்சங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தங்களது நிறுவனம் / தொழில் அமைப்புகள் / சங்கங்கள் தொடர்பான ஒன்றிய அரசின் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கை மனுக்கள் மற்றும் ஆலோசனைகளை தேர்தல் அறிக்கை குழுவினரிடம் நேரிலோ, கடிதம் மூலமாகவோ அல்லது கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு, அண்ணா அறிவாலயம், எண்.367/369, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

மின்னஞ்சல் முகவரி: dmkmanifesto2024@dmk.in

தொலைபேசி எண்: 08069556900

வாட்ஸ்அப்: 90432 99441

ட்வீட் : #DMKManifesto2024

பேஸ்புக் பக்கம் : DMK Manifesto2024

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்துள்ளார்.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை,பிப். 8-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

மாநில உரிமைகளை காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இன்று (8.2.2024-வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.





கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணை பெருந்தலைவர்கள், மாவட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக கண்டனக் குரலை எழுப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் நேற்று முன்தினம் (06.02.2024), திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் திருவல்லிக்கேணி, ஜானி பாட்சா தெருவில், செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி 3 மற்றும் 4 நியாயவிலைக் கடைகளுக்கு திருவல்லிக்கேணி தொகுதி மேம்பாட்டு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்கள். உடன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் (ம) 114வது வட்ட மாமன்ற உறுப்பினர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா புகைப்படக் கண்காட்சியை நேற்று முன்தினம் (06.02.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மா.அரவிந்த், மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அவரின் முழு உருவ வெண்கலச் சிலைக்கு மீனவர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம். எல். ஏ.ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜன்,மாநில மகளிர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கே. பவானி ராஜேந்திரன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த. திவாகரன், நகர் மன்ற தலைவர் ஆர் கே கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ராமேஸ்வரம் மற்றும் பரமக்குடி நகர் மன்ற தலைவர்கள் நாசர்கான், சேது கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் வி. வாசு தேவன், சண்முகநாதன், மனோகரன்,ஆப்பனூர் ஆறுமுகவேல், பூபதி மணி, சாயல்குடி ஜெயபால், போகலூர் கே கதிரவன், குணசேகரன்,உதயகுமார், கே ஜே பிரவீன், முத்துக்குமார்,பரமக்குடி ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, நைனார் கோவில் அண்ணாமலை, ஆர் எஸ் மங்கலம் கண்ணன்,மற்றும் செயற்குழு உறுப்பினர் அகமது தம்பி, முன்னாள் செயற்குழு உறுப்பினர் குணசேகரன்,மண்டபம் பேரூர் கழக செயலாளர் ரகுமான் மரக்காயர்,பரமக்குடி நகர் செயலாளர் ஜீவரத்தினம், பொருளாளர் ஜானகிராமன், உட்பட மாநில ,மாவட்ட, நகர ,பேரூர், ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### பிற்படுத்தப்பட்டோர் - சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவ - மாணவியருக்கு

# ரூ.16.98 கோடியில் 5 விடுதிக் கட்டிடங்கள்! ரூ.7.22 கோடியில் 5 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு - வகுப்பறைகள் கட்டிடங்கள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 8-

அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) நேற்று முன்தினம் (06.02.2024) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 16 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 5 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 7 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூகநீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது.

**விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தல்!**

தென்காசி மாவட்டம், சோலைச்சேரியில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 3 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம் மற்றும் சங்கரன்கோவிலில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 3 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 3 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்;

தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 3 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 16 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்களை அமைச்சர் திறந்து வைத்தார்.

**உட்கட்டமைப்புப் பணிகள் - கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்!**

மதுரை மாவட்டம் - விபெருமாள்பட்டி, பெருங்காமநல்லூர், தாடையம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் - சென்ன மநாயக்கன்பட்டி மற்றும் தேனி மாவட்டம் - எ புதுப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள 5 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்ட்) நிதி உதவியுடன் 7 கோடியே 22 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வகங்கள், கூடுதல் கழிப்பறைகள், ஆழ்துளை கிணறுகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ஆகிய நிறைவுற்ற உட்கட்டமைப்புப் பணிகளை அமைச்சர் திறந்து வைத்தார்.


இத்துறையில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் மறைந்த 17 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தி.ந. வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் தொகுதியில் புதிய பூங்கா திறப்பு!

சென்னை, பிப்.8

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு155, இராமாபுரம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு நிதியின் மூலம் ரூபாய் 1 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம், அங்கன்வாடி கட்டிடம், புதிய பூங்கா, விளையாட்டுத் திடல் சீரமைத்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான துவக்க விழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் (06.02.2024) காலை 11.30 மணியளவில், பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வ குமார், எம்.சி. தலைமையில், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி கலந்து கொண்டு மேற்கண்ட முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.



கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் தூத்துக்குடியில் மழை வெள்ள பாதிப்பு நிவாரணப் பணிகளுக்காக நிவாரண நிதியாக ரூ.1 இலட்சம் நிதியை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற செயலாளர் விஜயா தாயன்பன் வழங்கினார்.

### திருவண்ணாமலை மாவட்டம் - தண்டராம்பட்டு வட்டம் -

# வானாபுரம் ஊராட்சியில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் - 8 புதிய கட்டிடங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்! 3076 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கினார்!

திருவண்ணாமலை, பிப்.8-

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், வானாபுரம் ஊராட்சியில் 3076 பயனாளிகளுக்கும், கட்டி முடிக்கப்பட்ட 8 புதிய கட்டிடங்கள் என மொத்தம் ரூபாய் 12 கோடியே 29 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ. பாஸ்கர பாண்டியன், செங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் பட்டா மாற்றம், வருவாய் சான்றிதழ்கள், முதியோர் மற்றும் இதர மாதாந்திர உதவிதொகைகள், மாற்றுத்திறனாளி உதவித்தொகை, இயற்கை மரணம் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, விபத்து நிவாரண நிதி, எஸ்டி சாதிச் சான்றுகள் என 444 பயனாளிகளுக்கு ரூபாய் 63 இலட்சத்தி 64 ஆயிரம் மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் பழங்குடியினருக்கான புதிய வீடுகளுக்கான அனுமதி ஆணை மற்றும் அரசு வீடு வழங்கும் திட்ட பயனாளிகளுக்கு மேற்கூரை மற்றும் கூடுதல் நிதி அளித்தல் என 62 பயனாளிகளுக்கு ரூபாய் 47 இலட்சத்தி 46 ஆயிரம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி அளித்தல் என ஆயிரத்து 14 பயனாளிகளுக்கு ரூபாய் 80 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் மது விலக்கு குற்றவாளிகளின் மனம் திருந்தி வாழ்பவர்களுக்கான நிதி அளித்தல் 22 பயனாளிகளுக்கு ரூபாய் 11 இலட்சம் மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளி நலத் துறை சார்பில் மின்கலன் பொருத்தப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலி, செயற்கை கால் என 16 பயனாளிகளுக்கு ரூபாய் 16 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பீட்டிலும்,

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை (கூட்டுறவு) சார்பில் மகளிர் சுய உதவிக்குழு கடன், பயிர் கடன், கேசிசி கால்நடை வளர்ப்பு மூலதன கடன், மத்திய காலக்கடன், மாற்றுத்தினாளி கடன், டாம்கோ கடன் என 657 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 38 இலட்சத்தி 69 ஆயிரம் மதிப்பீட்டிலும், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் விலையில்லா தையல் இயந்திரம் 2 பயனாளிகளுக்கு ரூ. 16 ஆயிரம் மதிப்பிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பவர்வீடா;,சுழல்கலப்பை, நுண்நீர் பாசன திட்டம் மழை தூவான், விவசாய ஈடுபொருட்கள் அளித்தல் என 11 பயனாளிகளுக்கு ரூபாய் 1 இலட்சத்தி 94 ஆயிரம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலை த்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூபாய் 30 ஆயிரம் மதிப்பீட்டிலும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வு நலத்துறை சார்பில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், கர்ப்பினி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் அளித்தல், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகம் அளித்தல், மருத்துவ காப்பீடு திட்டம் அட்டை என 659 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 58 இலட்சத்தி 28 ஆயிரம் மதிப்பீட்டிலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான கல்வி மற்றும் திருமண உதவித்தொகையாக 96 பயனாளிகளுக்கு ரூபாய் 3 இலட்சத்தி 39 ஆயிரம் மதிப்பீட்டிலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் பழங்குடியின நலவாரிய அட்டை 90 பயனாளிகளுக்கு ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும் என 3 ஆயிரத்து 76 பயனாளிகளுக்கு ரூபாய் 10 கோடியே 11 இலட்சத்தி 86 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் பேராயம்பட்டு ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டிலும், வாணாபுரம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டிலும், காம்பட்டு ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டிலும், ராதாபுரம் ஊராட்சி அகரம் கிராமத்தில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டிலும், ராதாபுரம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதியதாக நான்கு வகுப்பறை கட்டிடம் (தரைத்தளம் மற்றும் முதல் தளம்) ரூபாய் 65 இலட்சத்தி 56 ஆயிரம் மதிப்பீட்டிலும், பேராயம்பட்டு ஊராட்சியில் அங்கன்வாடி கட்டிடம் ரூபாய் 15 இலட்சத்தி 26 ஆயிரம் மதிப்பீட்டிலும், வாணாபுரம் ஊராட்சியில் நியாயவிலைக் கடை கட்டிடம் ரூபாய் 12 இலட்சத்தி 30 ஆயிரம் மதிப்பீட்டிலும், காம்பட்டு ஊராட்சியில் நியாயவிலைக் கடை கட்டிடம் ரூபாய் 12 இலட்சத்தி 30 ஆயிரம் மதிப்பீட்டில் என மொத்தம் ரூபாய் 2 கோடியே 17 இலட்சத்து 42 ஆயிரம் மதிப்பீட்டில் அமைச்சர் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது :-

முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் சமமான சமஉரிமை வழங்கும் திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்.

வானாபுரம் ஊராட்சியில், சிமெண்ட் சாலை, பள்ளிக்கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டி, பள்ளி நூலக கட்டிடம், பேவர் ப்ளாக் சாலை, பள்ளிகளில் சத்துணவு கூடம் என ஏறத்தாழ 86 பணிகளுக்கு ரூபாய் 8 கோடியே 46 இலட்சத்தில் செலவு செய்யப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் சென்னை மேயராகவும், உள்ளாட்சி துறை அமைச்சர் மற்றும் துணை முதல்வர் என்று பல்வேறு பதவிகளில் செயலாற்றிய அனுபவத்தினால் மக்களுக்கு தேவையான திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்று அறிந்து செயல்படுத்தி சிறப்பான ஆட்சியை செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலே மற்ற மாநிலங்களின் முன்னோடியாக பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அதில் பள்ளிகளில் காலை சிற்றுண்டித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடனுதவி, அரசு பள்ளியில் பயின்று உனர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கும் புதுமைப்பெண் திட்டம், குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம் திட்டம், மக்களை தேடி மருத்துவம் திட்டம், அரசின் முக்கியமான 18 துறைகளின் சேவைகளை மக்கள் ஒரே இடத்தில் பெறுவதற்கான மக்களுடன் முதல்வர் முகாம் திட்டம், மக்களை நாடி அவர்களின் குறைகளை தீர்க்க தமிழ்நாடு அரசின் உங்களை தேடி, உங்கள் ஊரில் என்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, கூடுதல் ஆட்சினர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி. மந்தாகினி, இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கம் கோ.நடராஜன், மகளிர் திட்டம் இயக்குநர் திருமதி. சரண்யா தேவி, வேளாண்மை இணை இயக்குநர் ஹரக்குமார், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பூ.மீனாம்பிகை, ஒன்றியக்குழு தலைவர் திருமதி. பரிமளா கலையரசன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் திருமதி. ந.பூங்கொடி மற்றும் துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்

### பிப்ரவரி 8 (2008)



**சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.**

**பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### வருகிற 12ம் தேதி வரை

# தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும்!

சென்னை, பிப். 8-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (08.02.2024) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

(09.02.2024 முதல் 12.02.2024 வரை) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

(13.02.2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக் கால் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



நாகம்பட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் தமிழ் துறை நடத்தும் செவ்வியல் இலக்கிய உரை வளங்கள் பன்னாட்டு கருத்தரங்க விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்ஜி. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டு உரையாற்றினார்கள்.மேலும் தமிழ் துறையில் பயிலும் 91 மாணவ – மாணவிகளுக்கு தனது சொந்த நிதியிலிருந்து புத்தகத்தை வழங்கினார்கள். உடன் பதிவாளர் சாக்ரட்டீஸ், இயக்குனர் வெளியப்பன் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் சேதுராமன், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன் தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி சத்தியராஜன், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

# ‘திராவிட மாடல்’ அரசின் தூதுவர்களாக மகளிர் அனைவரும் செயல்பட வேண்டும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,பிப்.8 –

**“திராவிட மாடல் அரசின், நம் முதல்வரின் பிராண்ட் அம்பாசிடராக, முதலமைச்சரின் முகமாக, இந்த அரசின் தூதுவர்களாக மகளிர் அத்தனை பேரும் செயல்பட வேண்டும்,” என்று சென்னையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.**

சென்னை, ஜார்ஜ் டவுன், ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று முன்தினம் காலை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் 731 பயனாளிகளுக்கு 5 கோடியே 63 லட்சத்து 66 ஆயிரத்து 31 ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பாக, அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், மணியம்மையார் நினைவு கைம்பெண் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு மறுமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு கீழும், பெண்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்கான, பிற திட்டங்களின் கீழும் சுமார் 787 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 67 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### முதல் உரையே மகளிர் உரிமை துறை!

அமைச்சர் அக்கா கீதா ஜீவன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், ``இந்தத் தேதியில் இந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு என்னிடத்தில் தேதி வாங்குவதற்குரிய அந்தப் பொறுப்பை நான் சேகர்பாபு அவர்களிடம் விட்டுவிட்டேன்” என்றார். ஏற்கனவே, அவர் என்னிடம் நிறைய தேதி வாங்குவார். இப்போது மற்ற அமைச்சர்களுக்கும் சேர்த்து, தேதி வாங்க ஆரம்பித்திருக்கிறார்.

அக்கா அவர்கள் சொன்னதைப் போல் சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினராக என்னுடைய முதல் கன்னிப் பேச்சில், என்னுடைய முதல் உரையே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மீதுதான் பேசினேன்.

எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு எனக்கு முழு உரிமை இருக்கிறது. அந்த உரிமையோடுதான் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த நான்கு திட்டங்களின் பெயரை மட்டும் நீங்கள் இன்னொரு முறை படித்து பாருங்கள். இந்த பெயரை வைத்தே இந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தது, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

### பராசக்தி வசனத்தை திட்டங்களாக்கிய கலைஞரின் பேனா!

சமுதாயக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி செய்யக்கூடிய எண்ணம் கலைஞர் அவர்களுக்கு முதலமைச்சர் பதவிக்கு வந்த பிறகு ஏற்பட்டதல்ல. தந்தை பெரியாரின் பாசறையில் தங்கிப் பயிற்சி பெற்ற காலத்திலேயே கலைஞருக்கு ஏற்பட்ட அந்த எண்ணத்தால்தான் இப்படிப்பட்ட திட்டங்களை அவர் செயல்படுத்தி இருக்கிறார்.

எந்த கலைஞரின் பேனா, `பராசக்தி’ படத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக வசனங்கள் எழுதியதோ, அதே கலைஞரின் பேனாதான் பிற்காலத்தில் அப்படி பாதிக்கப்படுகின்ற பெண்களுக்கு உதவி செய்வதற்காக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றில் கையெழுத்து போட்டது.

பெண்களை முன்னேற்ற பெண்களுக்கு கல்வி, பொருளாதார சுயசார்பு கொடுக்கின்ற எல்லா திட்டங்களும், திராவிட இயக்கத் தலைவர்களின் கொள்கைகளில் இருந்துவந்த திட்டங்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

பெண்கள் பொருளாதார தன்னிறைவு அடைய வேண்டும் என்பதால்தான், மகளிர் சுய உதவி குழுக்களை, நாட்டிலேயே முதன் முறையாக 1989ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள்தான் துவங்கி வைத்தார்.

குடும்ப சொத்தில் பெண்களுக்கு சம உரிமை என 35 வருடத்திற்கு முன்பு, சட்டத்தைத் தீட்டியதும் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். பெண்கள் சமையலறையில் முடங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் `இலவச கேஸ் அடுப்புத் திட்’த்தைக் கொண்டு வந்ததும் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில்தான். விறகு அடுப்பில் சமைக்கும்போது வருகின்ற அந்த புகையால், பெண்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கோளாறுகளைக் குறைக்கத்தான் கேஸ் அடுப்பைக் கொடுத்தார்.

### மகளிரின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள்!

இப்படி மகளிர் நலனுக்காக கலைஞர் கொண்டுவந்த திட்டங்களையும் அவருடைய சாதனைகளையும் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். அதன் தொடர்ச்சியாகத்தான் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், புதுமைப்பெண் திட்டத்தைக் கொண்டு வந்தார். மகளிர் உரிமைத் தொகை திட்டத்த அறிமுகப்படுத்திருக்கிறார். பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தையும் நம்முடைய தலைவர் அவர்கள்தான் அறிவித்தார். ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில் இத்தனை திட்டத்தையும் செய்து இருக்கிறார். இப்படி அடுக்கடுக்காக மகளிரின் முன்னேற்றத்திற்காக நம்முடைய ஆட்சிக் காலங்களில் கொண்டு வரப்பட்ட திட்டங்களின் விளைவுதான் பெண்கள் இன்றைக்கு பல துறைகளில் முன்னேறி வருகிறார்கள்.



### பெண்களின் எண்ணிக்கையில் 43 சதவிகிதம்!

இன்னும் சொல்லப்போனால், ஆண்களை விட பெண்கள் இன்றைக்கு அதிகம் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். சில நாட்களுக்கு முன்பு உலகப் புகழ்பெற்ற `நியூயார்க் டைம்ஸ்’பத்திரிகையில், ஒரு கட்டுரை வந்திருக்கிறது.

அந்தக் கட்டுரையில் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்றும், திறன் மிகுந்த மனிதவளம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்றும் பாராட்டி எழுதி இருக்கிறார்கள். அந்தக் கட்டுரையில் இந்தியா முழுவதும் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடிய பெண்களின் எண்ணிக்கையில் 43 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து உருவாகிக்கொண்டிருக்கிறார்கள், என்று அந்தப் பத்திரிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. அதாவது அந்த அளவிற்கு, பெண்களை இங்கே கல்வியறிவு பெற்றவர்களாக, திறன் பெற்றவர்களாக உருவாக்கி வந்து கொண்டிருக்கிறோம்.

இது எதுவோ ஒரே நாளில் தானாக நடந்த விஷயம் அல்ல. நமது கழக அரசு கொண்டு வந்த திட்டங்களால்தான் பெண்கள் இப்போது வேகமாக முன்னேறி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் முதல் முறையாக ஆட்சிக்கு வந்தார். அப்போது கலைஞர் கொண்டு வந்த திட்டம்தான் திருமண உதவித் தொகை திட்டம். எட்டாம் வகுப்பு வரை படித்தால், திருமண உதவித் தொகை திட்டம் என்று தலைவர் அறிவித்தார்.

பெற்றோர்கள் எல்லாம் பெண் குழந்தைகளை எட்டாம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். அதன் பிறகு அந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் மாற்றினார். பத்தாம் வகுப்பு வரை படித்தால்தான் திருமண உதவித்தொகை என்று சொன்னார்.

அதன் பிறகு பெற்றோர்கள் பெண் குழந்தைகளை பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். பெண்கள் குறைந்தது பன்னிரண்டாம் வகுப்பு படித்தால்தான் திருமண உதவித்தொகை என்று கலைஞர் மாற்றினார். அதன் பிறகு, பெண்கள் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்தார்கள். இந்த விதிகளை கலைஞர் அவர்கள் மாற்றினார் அல்லவா, அது உதவி கேட்டு வருகின்ற விண்ணப்பங்களை குறைப்பதற்காக அல்ல, பெண்கள் இன்னும் நிறைய படிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்.

இப்போது அதற்கு அடுத்த கட்டத்திற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு சென்று கொண்டிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்விப் படிப்புக்கு கல்லூரிக்குச் செல்கின்ற அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்று ‘புதுமைப் பெண் திட்டம்’ என்ற பெயரில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இந்த இரண்டரை வருடத்தில் மட்டும் இரண்டு லட்சத்து 71 ஆயிரம் மாணவிகள் இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்திருக்கிறார்கள்.

பெண்கள் உயர் கல்விப் படிப்பதற்கு பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல பெண் பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்ப வேண்டும் என்ற அந்த எண்ணத்தை பெற்றோர்கள் மனதில் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த மேடையில் கூட புதுமைப்பெண் திட்டத்தால் பயனடைகின்ற மாணவிகளுக்கு நம் முதலமைச்சரின் வாழ்த்துக் கடிதங்களை வழங்க இருக்கின்றோம்.

### மகளிர் முன்னேற்றமே சமத்துவ சமுதாயம்!

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை களைய வேண்டிய கடமை எந்த அரசுக்கும் உண்டு. அந்த வகையில் ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெண்கள், கைம்பெண்கள் ஆகியோருக்கு இந்த அரசு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆணாதிக்க நிலையை உடைத்து பெண்களும் ஆண்களும் சரி நிகர் சமம் என்ற உன்னத நிலையை நோக்கி நமது தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற நம் தலைவர்கள் கண்ட கனவாகும். அந்தக் கனவை நோக்கி சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் மகளிர் முன்னேற்றம் என்பது மிக மிக முக்கியம்.

அதற்கு எல்லா வகையிலும் இந்த திராவிட மாடல் அரசு உங்களுக்குத் துணை நிற்கும். அந்தப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்ற நம்முடைய சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு வாழ்த்துகள், பாராட்டுகள்.

மகளிர் மட்டும் அல்ல, திருநங்கையர், திருநம்பியரும் வாழ்வில் முன்னேற்றம் அடைகின்ற அளவுக்கு ஏராளமான திட்டங்களை நம்முடைய கழக அரசு வழங்கி வருகின்றது. இங்கு பயனாளிகளாக வந்திருக்கக்கூடிய அத்தனை மகளிர் மற்றும் திருநங்கையர்க்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் பயனாளிகள் நீங்கள் அத்தனை பேரும் நம்முடைய திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் பிராண்ட் அம்பாசிடராக, முதலமைச்சரின் முகமாக, இந்த அரசின் தூதுவர்களாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

காலத்திற்கு ஏற்ப, இன்னும் பல திட்டங்கள் உங்களைத் தேடி வரும் என்ற அந்த உத்தரவாதத்தையும் நான் இங்கே தருகிறேன். இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி உங்கள் அத்தனை பேரையும் சந்தித்ததில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கீதா ஜீவன், தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், துணை மேயர் மகேஷ்குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஐ.ஏ.எஸ், ஆணையர் அமுதவல்லி ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சியர் ரஷ்மிக் சித்தார்த் ஜக்டே ஐ.ஏ.எஸ், துறையின் கூடுதல் இயக்குனர் எஸ்.பி.கார்த்திகா, மகளிர் ஆணையத் தலைவி ஏ.எஸ்.குமாரி, கைம்பெண் மற்றும் திருநங்கை நல வாரிய உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள், மாணவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (06.02.2024) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஜோசப் சாமுவேல், ப. தாயகம் கவி, அ.வெற்றியழகன், துணை மேயர் மு. மகேஷ் குமார், சமூக நலன் மற்றும் உரிமை துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!

## தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை !

*தூத்துக்குடி, பிப். 8 -*

*மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர் என தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி.பி. கீதாஜீவன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார். அவரது அறிக்கை வருமாறு:*



*மாநில உரிமைகள் காத்திடவும், கூட்டாட்சி கோட்பாட்டை சிதைக்கும் வகையில் ஆளுநர்கள் மூலம் ஆட்சி செய்ய துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும் மா.கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இன்று (08.02.2024 - வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்திட உள்ளார்கள்.*

*மா.கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க .வும் கலந்து கொள்ளும் என தி.மு.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து உள்ளார்கள்.*

*கழகத் தலைவரின் அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி மாவட்டத்தில் மா.கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இன்று ( 08.02.2024 - வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி பாளைரோடு சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் எதிரில் நடைபெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழகமும் பங்குகொள்கிறது.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.*

---

### கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாக

## வியாபாரிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம்!

### பெருநகர சென்னை காவல் இணை ஆணையர் டாக்டர் பொ.விஜயகுமார் தலைமையில்!

*சென்னை, பிப். 8 -*

*கோயம்பேடு அங்காடி நிர்வாகக் குழு அலுவலகத்தில் பெருநகர சென்னை காவல் இணை ஆணையர் (மேற்கு) டாக்டர் பொ. விஜய குமார் தலைமையில், நேற்று முன்தினம் கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி முன்னிலையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாக வியாபாரிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் வியாபாரிகள் தெரிவிக்கையில், “பண்டிகை காலத்தில் மட்டுமல்லாது மற்ற நாட்களிலும் போக்குவரத்து காவல் துறையினரை வளாகத்தில் பணியில் ஈடுபட வேண்டும், வணிக வளாகத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தது போன்று, மாநகர பேருந்துகள் வளாகத்திற்கு வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மேலும் உணவு தானிய அங்காடியில் இரவு 7.00 மணி முதல் அதிகாலை வரை ரோந்து பணியினை தீவிர படுத்த வேண்டும்” எனவும் வியாபாரிகள் வலியுறுத்தினர்.*

*இக்கூட்ட இறுதியில், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மு.இந்துமதி தெரிவிக்கையில், “வியாபாரிகள் அனைவரும் தத்தமது கடைகளுக்கான 2024-2027 தொகுப்பாண்டிற்குரிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 01.03.2024 முதல் சமர்ப்பிக்க வேண்டும்” என கேட்டுக் கொண்டார்.*

*இக்கூட்டத்தில் காவல் துணை ஆணையர் (கோயம்பேடு) திருமதி. கோ.உமையாள், உதவி ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) சரவணன், உதவி ஆணையர் (போக்குவரத்து) சுந்தர்ராஜன் மற்றும் வளாக சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கலைஞர் 100 1924 - 2023

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)11/2024 நாள் : 05.02.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17,24,26,51,52, 53,54,55,56,57,58க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 39 பணி | 21.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 22.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 076/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 06.02.2024


நாள்
8 - 2 - 2024,
வியாழக்கிழமை,
காலை 9.30 மணி
கலைஞர்
100
1924 - 2024
ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி
சோலார் பகுதிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
இளம் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் / செயலாளர் - ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.
பேரன்புடன்... K.E.பிரகாஷ் B.A., துணைச் செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி
மேற்கு
மண்டலம் - 5


கலைஞர் 100
1924 - 2023
08.02.2024 காலை 9.00 மணிக்கு
ஈரோடு மாவட்டம், சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை
வருக! வருக! என அன்புடன் வரவேற்கும்...
ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (06.02.2024) திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம், வானாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே. கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, அண்ணா சாலை, செங்கல்வராயன் நாயக்கர் மாளிகையில், நேற்று முன்தினம் (06.02.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தலைமையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி ஆபரேட்டர் சங்கத்தினர், தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர் மற்றும் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர் மற்றும் தொழிலாளர் நலவாரிய தலைவர் ஜோ.ஜீவா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### போட்டித் தேர்வுகளை அவரவர் தாய்மொழியில் எழுத அனுமதிப்பீர்!

# இந்தியில் மட்டுமே எழுதலாம் எனும் ஒன்றிய அரசின் பிடிவாதமே முறைகேடுகளுக்குக் காரணம்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, பிப்.8-

நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் பொதுத் தேர்வுகள் நேர்மையற்ற வழி முறை தடுத்தல்) மசோதா, 2024 மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தன் விவரம் வருமாறு:-

நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பொதுத் தேர்வுகள் நேர்மையற்ற வழிமுறை தடுத்தல்) மசோதா, 2024 மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச எனக்கு வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி.

ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள இந்த மசோதா மிக முக்கியமானதாகும். கடந்த காலத்தில் தேர்வுகள் நடந்த போது பல தருணங்களில் நேர்மையற்ற வழிகள் பின்பற்றப்பட்டதால் ஏற்பட்ட குளறுபடி சறுக்கல்களையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த மசோதாவை தாக்கல் செய்துள்ளது.

பொதுவாக நாடாளுமன்றத்தில் அரசு ஒரு மசோதாவை தாக்கல் செய்கிறது என்றால் அந்த விஷயங்கள் தொடர்பாக கடந்த காலத்தில் பல நெருடலான விஷயங்கள் நடந்துள்ளன என்றே அர்த்தம். அந்தக் குளறுபடிகளை முறைகேடுகளை தடுக்கவும், களையவுமே மசோதா கொண்டு வரப்படுகிறது.

இந்தியாவையே உலுக்கிய மிகப் பெரிய ஊழல் முறைகேடு மத்தியப் பிரதேசத்தில் நிகழ்ந்த "வியாபம் முறைகேடு" என்பதை நாடறியும். இந்த மிகப்பெரிய தேர்வு முறைகேடு எப்படி நிகழ்ந்தது? எப்போது நிகழ்ந்தது? யார் யாருக்கு இதில் பங்குண்டு? அப்போது இந்த அரசு வாய்மூடி மௌனமாக இருந்தது.

அதற்குப் பிறகு தேசிய அளவிலான நீட், யுபிஎஸ்இ போன்ற நுழைவு/போட்டித் தேர்வுகள் நாடெங்கும் நடந்தது. மேலும் பல தருணங்களில் போட்டித் தேர்வு நடக்கும் கட்டடங்களின் மீதேறி ஜன்னல்கள் வழியே தேர்வெழுதுவோருக்கு நேர்மையற்ற வழியில் எவ்வாறெல்லாம் விடைகளை சொல்லியும், காகிதத்தில் விடைகளை எழுதி தந்த முறைகேடுகள் சம்பவங்களை செய்தித் தாள்களில் படங்கள் வெளியானதைக் கண்டோம்.

அப்போதும் இந்த அரசு மௌனமாகவே இருந்தது. அதற்குப் பிறகு இத்தனை ஆண்டுகள் கழித்து பிறகு ஏறக்குறைய 1.5 இலட்சம் பேர் தேர்வு முறைகேடுகளில் தங்கள் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். இந்த அரசு முதலில் இப்படிப்பட்ட தேர்வு முறைகேடுகள் நிகழ்வதற்கான மூலகாரணத்தைக் கண்டறிய வேண்டும்.

இந்தமாதிரியான தேர்வு முறைகேடுகளைத் தடுப்பது எப்படி இந்தக் குற்றங்களுக்கு தீர்வு காணும் வழிகள் குறித்து அரசு ஆராய வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதற்கான வழிமுறைகள் குறித்து இந்த மசோதாவில் ஒன்றிய அரசு எதுவும் குறிப்பிடவில்லை.

இந்த மசோதா முழுவதும் தேர்வு முறைகேடுகள் செய்வோரை எப்படி தண்டிப்பது, சிறையில் அடைப்பது அபராதம் விதிப்பது குறித்து மட்டுமே கருத்தில் கொண்டுள்ளதே தவிர இந்த முறைகேடுகளைத் தடுப்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

உதாரணமாக இத்தகைய குற்றங்கள் நிகழக் காரணம் என்ன? யார் இதைச் செய்கின்றனர். எதற்காக இப்படி செய்கின்றனர். பணத்துக்காக கும்பலாக ஒன்று சேர்ந்து மோசடி செய்கிறார்களா? அதற்கான தீர்வுகளை முன் வைக்க இந்த மசோதா தவறிவிட்டது. ஒரு முறைகேடு நடப்பதற்கான மூலக்காரணத்தை அறிந்து தீர்வுகள் காண்பது அரசின் கடமையாகும்.

தேர்வர்கள் இந்த முறைகேடுகளில் ஈடுபடுவது எதனால் என்று பார்த்தால் தேர்வர்கள் இம்மாதிரியான போட்டித் தேர்வு எழுதுவதற்கு தங்களை தயார் படுத்திக் கொள்ளாதது ஒரு காரணம். மற்றொரு காரணம் எது உந்துகிறது என்பதே. மொழிப் புலமை இல்லாமல் போனதும் கூட ஒரு காரணம் ஆகும். தேர்வர்கள் அவரவர் தாய் மொழியில் தேர்வுகளை எழுத வாய்ப்பு அளித்தால் இந்த முறைகேடுகள் நடக்காமல் தடுக்க முடியும். ஆனால் ஒன்றிய அரசு தனது இந்தி மொழி கொள்கையில் பிடிவாதமாக உள்ளது. இந்த தேர்வுகள் இந்தியில் தவிர்த்து வேறு எந்த இந்திய மொழிகளிலும் எழுத முடியாது போனதும் ஒரு காரணம். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, இன்னும் பல மாநிலங்களில் மாநில கல்வி முறையில் பயின்றோர் அவரவர் மாநில மொழிகளில் எழுத அனுமதித்தால் இந்த தேர்வு முறைகேடுகள் நிகழாமல் தடுக்கலாம். இந்தி மொழியில் எழுத வேண்டும் என்றால் அவர்களால் சரியாக எழுத முடிவதில்லை.

மேலும் ஒன்றிய அரசு இதற்காக ஒரு முழுமையான திட்டம் தயாரிக்க வேண்டும். மாநில அரசுகளுடன் இணைந்து அத்திட்டத்தை செயலாற்ற வேண்டும். தேர்வர்களை ஈர்த்து அவர்களுக்கு நுழைவுத் தேர்வுகள் போட்டித் தேர்வுகள் எழுதுவதற்கு எப்படி தயாராக வேண்டும் என்று நல்ல வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி அங்கு தேர்வுக்கு தேவையான பயிற்சிகளை அளிக்க வேண்டும். அப்போது தானாகவே இது போன்ற முறைகேடுகள் செய்வதை தேர்வர்கள் தவிர்த்து தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுத முடியும். ஆனால் இதையெல்லாம் இந்த அரசு செய்ததா? இல்லை.

நாட்டில் யுபிஎஸ்இ அல்லது ரயில்வே பணி வேலைக்கான அல்லது எந்த வேலைக்கான போட்டித் தேர்வுகளுக்கு தயார்ப்படுத்த தேர்வர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி தருவது மிக அவசியம். ஆனால் இதெல்லாம் ஒன்றிய அரசு செய்ததா? என்றால் எதுவும் செய்யவில்லை. ஆனால் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதில் மட்டும் கவனம் செலுத்துகிறது. குற்றமோ முறைகேடுகளோ செய்வோரைத் தண்டிப்பது சரியே. ஆனால் போட்டி தேர்வுகள் எழுதுவோருக்கு உதவியாக ஒன்றிய அரசு என்னென்ன செய்துள்ளது. எங்கெங்கு பயிற்சி மையங்கள் அமைத்து பயிற்சி அளித்துள்ளது.

அதைப் பற்றி எல்லாம் இந்த மசோதாவில் எதுவும் குறிப்பிடவில்லை. இது தான் இந்த மசோதாவிலுள்ள குறை.

மாநிலங்கள் மேற்கொண்டு வரும் தேர்வு பயிற்சி முறைகள் திறன் மேம்படுத்துதல் குறித்து பேசும் போது தமிழ்நாட்டில் செய்யப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு யு.பி.எஸ்.இ. போன்ற போட்டித் தேர்வுகள் எழுதும் தேர்வர்களுக்கு இத் தேர்வுகளில் சிறப்பாக எழுத பல உதவித் திட்டம் வகுத்துள்ளது. யுபிஎஸ்இ தேர்வு எழுதும் தேர்வர்களுக்கு தலா ரூ.7000 வரை செலவு செய்து சிறப்பு பயிற்சி மையங்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

நேர்முகத் தேர்வுக்கு செல்லும் போது ரூ.25,000 வழங்கி ஊக்கப்படுத்தி உறுதுணையாக இருக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இன்னொரு முக்கியமான திட்டம் "நான் முதல்வன்" திட்டமாகும். நான் முதல்வன் என்பது நான் வெற்றியாளர் என்பதை குறிக்கும் சிறப்பு திறன் மேம்பாட்டு திட்டமாகும். இத்திட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் படித்து போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு நகரத்தில் பல்கலைக் கழகங்கள் கல்லூரியில் பயின்ற மாணவர்களுடன் கலந்து பேசி கற்கவும் தங்களது மொழி மற்றும் அறிவார்ந்த திறன்களை மேம்படுத்தி நகரத்து மாணவர்களுக்கு இணையாக அவர்களை மாற்ற வழிவகை செய்கிறது.

இதனால் இத் தேர்வர்கள் தாழ்வு மனப்பான்மை இன்றி தைரியமாக தன்னம்பிக்கையுடன் போட்டித் தேர்வுகளை அணுக முடியும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை மேம்படுத்தி மொழித்திறனை வளர்த்து போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் தேர்வர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது. இதுவே இத்திட்டத்தின் வெற்றி ஆகும்.

தேர்வுகளில் முறைகேடுகள் நிகழாமல் தடுக்க தேர்வர்களின் மொழிப் பிரச்சினையை அகற்ற ஒன்றிய அரசு தீர்க்க வேண்டும். மேலும் இந்த முறைகேடுகளைத் தடுக்கவும் தவறிழைத்தவர்களை கண்டுபிடித்து விசாரித்து தண்டிக்கவும் தேசிய அளவிலான உயர் அதிகாரமிக்க குழு ஒன்றை ஒன்றிய அரசு ஏற்படுத்த இந்த மசோதா பரிந்துரைக்கிறது.

ஆனால் இந்த உயர் அதிகார குழுவில் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் இடம் பெறுகின்றனரா? இதில் மாநில அரசின் பங்கு என்ன? என்பது குறித்து இந்த மசோதாவில் எதுவும் கூறப்படவில்லை. இதனால் இம்மசோதா சட்டமான பிறகு இச்சட்டத்தை பயன்படுத்தி ஒருசிலர் பழிவாங்குவதையோ பாரபட்சமாக நடப்பதையோ தடுக்க முடியாது.

எனவே இந்தக் குழுவில் மாநில அரசின் பிரதிநித்துவம் தரப்பட வேண்டும். மாநில அரசிடம் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் இது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் இந்த விஷயத்தில் மாநிலங்களை இணைத்து செயல்பட வேண்டும்.

போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் வாயிலாக சிறப்பு பயிற்சி அளித்து தாய் மொழிப் புலமையை வளர்த்து அவரவர் தாய் மொழியில் தேர்வு எழுதச் செய்தால் இந்த தேர்வு முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்கலாம்.

போட்டித் தேர்வு எழுதுவோருக்கும் உள்ள அச்சத்தை போக்க வேண்டும். வெளிநாடுகளில் இது போன்ற தேர்வு முறைகேடுகள் நிகழ்வதில்லை. ஏனென்றால் அவர்கள் தொழில்நுட்பத்தை புகுத்தி தேர்வுகளில் முறைகேடுகள் நடப்பதைப் தவிர்த்து விடுகின்றனர்.

இந்த மசோதாவில் திருத்தங்கள் செய்திட பரிந்துரைத்து திருத்தங்கள் செய்ய வேண்டும். ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் மாநிலத்தின் குரல்களுக்கு மதிப்பளித்து மாநிலங்களோடு இணைந்து பணியாற்றி போதுமான நிதி, நேரம் செலவிட்டு வருங்கால இளைய சந்ததியினர்க்கு உறுதுணையாக நின்று ஊக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேசினார்.

### 26 ஆண்டுகளுக்கு மேல் சிறைகளில் தண்டனை அனுபவித்து வரும்

# 12 ஆயுள் தண்டனைக் கைதிகள் முன் விடுதலை!

## அறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, பிப்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.9.2021 அன்று ஆற்றிய உரையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்த நாளான 15.9.2021 அன்று நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து வரும் 700 ஆயுள் தண்டனை கைதிகளின் தண்டனை காலத்தை குறைத்து நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் முன்விடுதலை செய்திட இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக ஆயுள் தண்டனை பெற்று 10 முதல் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர்களின் தண்டனைகளை குறைத்து, அவர்களை முன்விடுதலை செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்திட 11.1.2022 அன்று ஓய்வு பெற்ற நீதிபதி என்.ஆதிநாதன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அக்குழுவின் பரிந்துரைப்படி, கடலூர் மத்திய சிறையிலிருந்து 4 கைதிகளும், கோவை மத்திய சிறையிலிருந்து 6 கைதிகளும், வேலூர் மத்திய சிறையிலிருந்து ஒரு கைதியும், சென்னை புழல் சிறையிலிருந்து ஒரு கைதியும், என மொத்தம் 12 ஆயுள் தண்டனை கைதிகளை நிபந்தனை அடிப்படையில் முன்விடுதலை செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு 55வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ப.முருகமணி, ஞான. இமையநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், ஹர்சத், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன் நகர்மன்ற துணைத்தலைவர் எஸ்.எஸ்.குமார் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பொ. வேதாசலம்

### பிப்ரவரி 8 (1982)



தந்தை பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழக உறுப்பினரானார். பின்னர் கழகம் துவங்கியபோது, அந்தநாள் முதல் இறுதி வரை கழக உறுப்பினராக விளங்கினார்.

மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

மூலக்கடை, மாதவரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கழகம் வளர்த்தவர். மிசா சிறைவாசம் உட்பட பத்து முறை சிறைக்கு சென்றவர்

"சிரித்துக்கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை" என தலைவர் கலைஞர் அவர்கள் மாதவரம் வேதாசலம் மறைந்தபோது அந்தோ! மாதவரம் வேதா! என கலைஞர் கடிதத்தில் சிறப்பித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கர்நாடக மாநில முன்னாள் கழக அமைப்பாளர்

# கி.சோழன் துணைவி ருக்குமணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



பெங்களூரு, பிப்.8-

கர்நாடக மாநில தி.மு.க.வின் மூத்த உறுப்பினரும், முன்னாள் மாநில கழக அமைப்பாளருமான கி.சோழனின் துணைவியார் திருமதி. ருக்குமணி சோழன் திங்களன்று உடல் நலிவுற்று அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

தகவலறிந்து மாநில இலக்கிய அணி போர்முரசு கதிரவன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதிச் சடங்கு சிவாஜி நகரில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

### பிப்ரவரி 8 (2009)



தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் "கோட்டை அமீர்" விருது வழங்கினார்.

தலைமைக் கழகச் சார்பில் 2004ஆம் ஆண்டு "கலைஞர் விருதி'னை தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## குடிசையில்லாத் தமிழ்நாட்டை உருவாக்க முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த திட்டம்!

# தமிழ்நாடு முழுவதும் ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 15,000 புதிய குடியிருப்புகள்!

## நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை, பிப். 8 -**

**யானைக்கவுனி கல்யாணபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், ரூ.44.91 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 புதிய குடியிருப்புகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு புதிய குடியிருப்புகளை பயனாளிகளிடம் வழங்கி சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாக. 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 288 வீடுகளை உங்களிடத்தில் ஒப்படைக்கின்ற விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகள்.

### சொந்த வீடு என்ற கனவு!

மனிதனாக பிறக்கும்போது எல்லோருக்குமே ஒரு பெரிய கனவு இருக்கும். அது என்ன கனவு என்றால், நமக்கென்று ஒரு சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற கனவுதான். அதுவும் சென்னை போன்ற பெரு நகரங்களில் உழைக்கும் மக்கள் தங்களுடைய வருவாயின் பெரும் பகுதியை வீட்டு வாடகை கொடுப்பதற்காகச் செலவிட வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதையெல்லாம் குறைக்கத்தான் இன்றைக்கு பல குடியிருப்புகளை நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து கட்டிக்கொண்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இதற்கெல்லாம் அடித்தளமிடும் விதமாக இந்தியாவிலேயே முதன்முறையாக 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பித்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

54 ஆண்டுகளுக்கு முன்பே குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இந்தப் பணியை ஆரம்பித்தார் கலைஞர் அவர்கள். அதனை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுக்கொண்டிருக்கிறார்.

இந்த பெயர் வித்தியாசத்திலேயே நீங்கள் புரிந்து கொள்ளலாம். குடிசைகள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த வாரியத்திற்கு `குடிசை மாற்று வாரியம்' என்று பெயர் வைத்து ஆரம்பித்தார்கள். அந்த லட்சியத்தின்படி, கீற்றுகளையும், தார்பாய்களையும் கூரைகளாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு கான்கிரீட் அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டித் தந்தவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### `தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்'

இன்றைக்கு அந்த குடியிருப்புகளை மேம்படுத்துகின்ற விதமாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லும் நோக்கில் நம் முதலமைச்சர் அவர்கள் `தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என பெயர் மாற்றம் செய்து மேம்படுத்தி வருகின்றார். அதில் ஒன்றுதான் இங்கு இருக்கக்கூடிய கல்யாணபுரம் குடியிருப்புத் திட்டம். இதுவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974ஆம் ஆண்டு கட்டப்பட்டதுதான்.

அப்போது கட்டப்பட்ட வீடுகள் பழுதாகி, பழையதாகிவிட்டன என்றும், அவற்றுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என்றும் நீங்கள் கோரிக்கை வைத்திருந்தீர்கள். இங்கே இருந்தது 254 வீடுகள். ஆனால், இன்றைக்கு இந்த அரசு உங்களுக்குக் கட்டித்தருவது 288 வீடுகள். அதாவது 34 வீடுகள் கூடுதலாக கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

கூடுதலாக கட்டிக் கொடுக்கிறோம் என்பதற்காக வீட்டின் சதுர அடியை குறைக்கவில்லை. ஏற்கெனவே இருந்த வீடுகளின் அளவு 326 சதுர அடி, ஆனால், கழக அரசு இப்போது கட்டிக் கொடுத்திருப்பது 412 சதுர அடியில். எனவே முன்பை விட பெரிய வீடாகவே கட்டிக் கொடுத்திருக்கிறோம்.





சென்னை, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப் பகுதியில் ரூ.44.91 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 288 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (06.02.2024) திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

எந்த நன்மையையும் அதிகமாகத் தருவதுதான் நம் திராவிட மாடல் அரசின் சாதனை என்பதற்கு, இந்த `கல்யாணபுரம் திட்டம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் கடந்த அக்டோபர் மாதம் சென்னையில் திரு.வி.க நகர், பெரியார் நகர் போன்ற இடங்களில், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 516 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆயிரம் குடியிருப்புகளை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினோம். அதற்கான பணிகளும் நடந்துக் கொண்டிருக்கின்றன. விரைவில், அதையும் கட்டி முடித்து திறக்க இருக்கின்றோம்.

### 2,400 கோடி ரூபாயில் 15,000 குடியிருப்பு

என்னுடைய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியிலும் இதேபோன்ற நான்கு திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதையும் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அதையும் விரைவில் கட்டிமுடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சென்னை மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 15 ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டும் பணியை நம் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கின்றேன்.

நம் தேர்தல் அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் பழுதடைந்த பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகளை அதே இடத்தில் கட்டித் தருவோம் என்று வாக்குறுதி வழங்கினார்கள். சொன்னதைச் செய்கின்ற விதமாக இன்றைக்கு புதிய குடியிருப்புகளைக் கட்ட அடிக்கல் நாட்டியும் வருகின்றோம்.

ஏனென்றால், இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை இவை மூன்றும்தான் மனிதர்களுக்கு மிக, மிக அத்தியாவசியம், மிக, மிக முக்கியம். அதில் முதலாவது இருக்கக்கூடியது இருக்க இடம். அதாவது வீடு என்பதை உறுதி செய்கின்ற வகையில், நம் திராவிட முன்னேற்ற கழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

### வீட்டிற்கு நீங்கள்தான் பொறுப்பு

இந்த 254 வீடுகளை நம் அரசு உங்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறது என்றால், இனிமேல் அது உங்களுடைய வீடு. உங்களுடைய வரிப் பணத்தில் கட்டப்பட்ட வீடு. எப்படி உங்கள் சொந்த முயற்சியிலோ, கடன் வாங்கியோ அல்லது நகைகளைவிற்றோ வீடுவாங்குகிறீர்களோ அதேமாதிரிதான் இந்த வீடும். இந்த வீட்டிற்கு இனிமேல் நீங்கள்தான் முழுப் பொறுப்பு.

உங்களுக்கென்று நீங்கள் ஒரு சங்கத்தை தொடங்க வேண்டும். சென்னையில் இருக்கக்கூடிய பல அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இருப்பதைபோல் குடியிருப்போர் நலச்சங்கம் அசோசியேஷன் தொடங்க வேண்டும். உங்களுடைய சொந்த வீடு, அதை நீங்கள் எப்படி பராமரித்துக் கொள்ள வேண்டும். எப்படிப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது உங்களுக்குத்தான் தெரியும்.

அந்த சங்கத்தின் மூலம் உங்களின் இந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் தேவைகளை, பிரச்சினைகளை மாநகராட்சி மற்றும் அரசுத் துறைகளின் மூலமாக சரிசெய்து கொள்ளவேண்டும். உங்களுடைய வீடு மட்டுமின்றி, சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று, உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். விட்டுக்கொடுத்து வாழ வேண்டும்

முக்கியமாக, நீங்கள் அத்தனைப் பேரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு ஏதாவது ஒன்று என்றால், நீங்கள்தான் போய் நிற்க வேண்டும். அப்போதுதான் உங்களுக்கு ஒன்று என்றால் பக்கத்து வீட்டுகாரர் வந்து நிற்பார்.

ஏனென்றால், நாம் தமிழ்நாட்டு மக்கள், அந்த உணர்வோடு நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். புதிய வீட்டில் உங்களுடைய கனவுகள் அனைத்தும் வெல்லட்டும். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் புத்தாடை, 25 கிலோ அரிசி, ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள், அதற்குமேல் ஊக்கத்தொகை என்று அண்ணன் சேகர்பாபு அவர்களும், அண்ணன் தயாநிதி மாறன் அவர்களும் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

எப்போதும் போல நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம் கழக அரசும், அனைத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் மக்களோடு மக்களாக உங்களோடு நிற்போம் என்பதை கூறிக்கொண்டு, அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்."

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற, இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., சென்னை துணை மேயர் மகேஷ்குமார், வீட்டு வசதித்துறைச் செயலாளர் சமயமூர்த்தி , நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பிரபாகரன், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் விஜய கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., உள்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---

மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

# 1,021மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, பிப். 8 –

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (06.02.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக் கழக கூட்டரங்கில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 1021 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிப் பேசினார்.

அவர் குறிப்பிட்டதாவது:

1021 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்குதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ரூ.35 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டியுள்ள மருத்துவமனைகளை திறந்து வைத்து, புதிய தாக கட்டப்பட வுள்ள கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதேபோல் நாகர்கோவில் தொல்லவிளை என்கின்ற பகுதியில் கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மக்களைத் தேடி ஆய்வகம் என்னும் திட்டத்தினை தொடங்கி வைத்தோம். இத்தகைய பணிகள் எல்லாம் எங்களுக்கு சாதனைகளாக தெரியவில்லை. மிக நீண்டகாலமாக நீதிமன்ற வழக்குகள் மூலம் காலம் தாழ்த்தப்பட்ட மருத்துவர்களுக்கான பணிநியமன ஆணைகள் வழங்குவது தான் சாதனையாக கருதுகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாகவே மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதைவிட மற்ற பணியிடங்கள் நிரப்பு வது எளிதாக இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 2905 மருத்துவப் பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது. மேலும் மாவட்ட நலவாழ்வு குழுமம் மூலமாக மருத்துவர் பணியிடங்கள் அந்தந்த மாவட்டங்களில் தற்காலிகமாக பணியிடங்கள் நிரப்பப்பட்டு வந்தது. மேலும் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு கூடுதலாக 5 மதிப்பெண்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் இரண்டு வருடம் பணிபுரிந்தவர்களுக்கு மட்டுமே கூடுதல் மதிப்பெண் வழங்குவது என்றால் ஆறு மாதம் மற்றும் இரண்டு வருடம் குறைவாக பணியாற்றிய எங்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்று சிலர் கருத்து தெரிவித்திருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று ஆறு மாதங்கள் கோவிட் காலங்களில் பணியாற்றியிருந்தால் 2 மதிப்பெண், ஒன்பது மாதம் பணியாற்றி இருந்தால் 3 மதிப்பெண், பதினெட்டு மாதம் பணியாற்றி இருந்தால் 4 மதிப்பெண், இரண்டு ஆண்டு காலம் முழுமையாக பணியாற்றியிருந்தால் 5 மதிப்பெண் வழங்கப்படும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்து இதற்கு ஒப்புதல் தந்தோம். மேலும் இன்னொரு நீதிமன்ற வழக்கு என்பது பணியிடம் அறிவிப்பு செய்யப்பட்ட போது கோவிட் மதிப்பெண் என்பது குறிப்பிடப்பட வில்லை, அம்மதிப்பெண் தரக்கூடாது என்று இன்னொரு மருத்துவர் சங்கம் வழக்கு தொடர்ந்தது. இதில் மதிப்பெண் தரக்கூடாது என்று ஒரு வழக்கு, மதிப்பெண் தர வேண்டும் என்று இன்னொரு வழக்கு. ஆகையால் இந்த வழக்குகளை எல்லாம் சரிசெய்வதற்கு இவ்வளவு காலம் எடுத்துக் கொண்டது. எனவே இவ்வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு 1021 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணை தற்போது வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தில் மேலும் 1251 மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இன்னும் ஒரு வாரம் காலத்திற்குள் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படவிருக்கிறது. மேலும் இதற்கான அறிவிப்பில் கோவிட் காலங்களில் பணியாற்றியவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் வழங்கப்படும் என்று குறிப்பிட்டு அறிவிப்பு வெளியிடப்படும்.

### மருத்துவப்பணியாளர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

மேலும் 983 மருந்தாளுநர் பணியிடங்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்புகள் முடிக்கப்பட்டு பணிநியமன ஆணை வழங்கும் நிலையில் உள்ளது. அதிலும் ஒரு சிக்கல் என்னவென்றால் அவர்களும் கோவிட் மதிப்பெண்கள் கேட்கிறார்கள். இதனால் மருத்துவத்துறை இயக்குநர்களிடம் கலந்து பேசியதில் கோவிட் காலங்களில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களே பணியில் இருந்தவர்கள். மருந்தாளுநர்கள் யாரும் கோவிட் பணிகளில் இல்லை. எனவே இவர்களுக்கு கோவிட் மதிப்பெண்கள் வழங்குவது பொறுத்தமாக இருக்காது என்று கருத்தத் தெரிவித்துள்ளார்கள். இக்கருத்துக்களை நாங்கள் உயர்நீதி மன்றத்தில் தெரிவிப்போம். நீதி மன்றத்தின் ஆணைகளைப் பெற்று 983 மருந்தாளுநர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணை விரைவில் வழங்கப்படும். அதேபோல் 1266 சுகாதார ஆய்வாளர்கள் பணியிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிலும்கூட நீதிமன்ற வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. 2271 கிராமிய சுகாதார செவிலியர்கள் நிரப்பப்பட வேண்டும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் அவர்களுக்கும் விரைவில் பணிநியமன ஆணைகள் வழங்கப்படும். அதேபோல் 350 ஆய்வக நுட்புநர்கள் பணியிடங்கள் இன்னும் 10 நாட்களில் அவர்களுக்கான பணி ஆணைகள் தயாராக இருக்கிறது, விரைவில் அவர்களுக்கும் வழங்கப்படும். முதன்முறையாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டது இந்திய மருத்துவத்துறை வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை. தமிழ்நாட்டினைப் பொறுத்த வரை 45 சுகாதார மாவட்டங்கள் இருக்கின்றது. இதில் 20 சுகாதார மாவட்டங்களில்தான் அதிக காலிப்பணியிடங்கள் இருக்கிறது. தற்போது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1021 மருத்துவர்களுக்கு, காலியாக உள்ள 20 சுகாதார மாவட்டங்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டது. மேலும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் இதுவரை 11,215 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த துறையை பொருத்தவரை மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (DMS), பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை (DPH), மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி (DME), இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை (DIM) என்கின்ற துறைகளையும் சேர்த்து ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் 22,447 ஆகும். இதுவரை 11,215 பேருக்கான இந்த பணி மாறுதல்கள் அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கே கிடைத்திருக்கிறது. மேலும் பதவி உயர்வு கலந்தாய்வு மூலம் இதுவரை பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை 4773.

இங்கே தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகளும் பங்கேற்றிருக்கிறார்கள் இங்கே அலுவலர்கள் சங்கங்களுக்கு இடையே இருந்த ஒரு மாதிரியான அந்த சங்கங்களுடைய கோரிக்கை அவரவர்கள் சங்கத்தில் இருக்கிற மருத்துவர்களுக்கு ஏதாவது நல்லது செய்யவேண்டும் என்கின்ற வகை யிலான அந்தந்த சங்கங்களின் கோரிக்கை இரு அரசாணைகள் பற்றிய நீண்ட நாள் பிரச்சினை ஒன்று இருந்தது. 293 என்கின்ற ஒரு அரசாணையும், 354 என்கின்ற ஒரு அரசாணையும் இந்த அரசாணைகளில் அரசு மருத்துவர்களுக்கு ஊக்கப்பணிகளுடன் கூடிய பணப்பலன் தரும் அரசாணை 293ல் இருந்த மருத்துவப்பிரிவின் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று அதிலிருந்த பாரபட்சங்களை அகற்றி தற்போது அனைவரும் மகிழ்ச்சி அடையும் வகையில் ஒரு தீர்வு காணப்பட்டு, கடந்த 20 நாட்களுக்கு முன்னால் நானும் துறையின் செயலாளரும் ஒரு அரசாணையை பெற்றுத்தந்திருக்கிறோம். நாகர்கோவில் ஆசாரிபள்ளத்தில் நடைபெற்ற இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நிகழ்வில் பங்கேற்று முடித்துவிட்டு நான் வெளியில் வரும்போது 20க்கும் மேற்பட்ட மூத்த மருத்துவர்கள் என்னை கை பிடித்து சொன்னார்கள் இதுவரை இந்த துறையின் வரலாற்றில் நாங்கள் போராடிக்கொண்டிருந்தோம், எங்களுடைய போராட்டங்களுக்கு செவி கொடுக்கிற நிர்வாகங்கள் இதுவரை வரவில்லை, முதன்முறையாக மருத்துவர்களின் போராட்டங்களுக்கு செவி கொடுத்து எங்களுடைய அனைத்து கோரிக்கைகளும் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்கின்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை எடுத்து சொன்னார்கள். இப்போது நன்றி தெரிவிக்கிற ஒரு மகிழ்ச்சியான சூழல் கடந்த 20 நாட்களாக எல்லா ஊர்களிலும் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வ விநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இளங்கோ மகேஸ்வரன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர் துரைராஜ் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

---


## தி.மு.க. 15ஆவது பொதுத் தேர்தல்

# கடலூர் மேற்கு மாவட்டம்

### நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

**"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக்முகைய்தீன் (எ) சித்திக் அவர்கள் மறைவெய்திய காரணத்தால் கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, பிப்ரவரி 6 (செவ்வாய் கிழமை) அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;**

**கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத் தலைவர் பொறுப்புக்கு ஜே. முசாதிக்அலி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,**

**கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக**
**திரு. ஜே. முசாதிக்அலி,**
எண். 32, முஸ்லிம் கருமார தெரு, நெல்லிக்குப்பம் - 607 105,
பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.
**அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 6.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ராம ராஜ்யத்துக்குப் பதிலாக - நாடு முழுதும் பெரியார் ராமசாமி ராஜ்யத்தை உருவாக்குவோம்!

## தூத்துக்குடியில் – கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!



**தூத்துக்குடி, பிப். 8 -**

**தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், உடன்குடியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் “I.N.D.I.A வெல்வது நிச்சயம்” என்ற தலைப்பில் பிப்ரவரி 5–ஆம் தேதி திங்களன்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் “ராமராஜ்யத்துக்குப் பதிலாக நாடு முழுவதும் சமூக நீதிக்கு வித்திட்ட தந்தை பெரியார் ராமசாமி ராஜ்யத்தை உருவாக்குவோம்” எனக் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில், மாற்றுக் கட்சிகளில் இருந்து பலர் விலகி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கனிமொழி எம்.பி. அவர்கள் உரையாற்றியதாவது:–

“நமது தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தேர்தல் அறிக்கை குழு தனது பயணத்தை தூத்துக்குடியில் தொடங்கியிருக்கிறது. காலையில் இருந்து பல தரப்பு மக்களைச் சந்தித்து குழுவினர் நாங்கள் உரையாடியிருக்கிறோம்.

இந்தத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல். ஒன்றியத்தில் இம்முறை ஏன் மாற்றம் வந்தே ஆக வேண்டும் என்பதை இங்கே பேசியவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். ஆட்சி மாற்றம் இந்த நாட்டிலே வரவில்லை என்றால், பி.ஜே.பி.யை வீட்டுக்கு அனுப்பி விட்டு ஒரு நல்லாட்சியை நாம் தேசிய அளவிலே உருவாக்கவில்லையென்றால், இன்று நாம் பார்க்கக் கூடிய இந்தியா இல்லாமல் போய்விடும்.

அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் பேசும் போது இந்த மேடையிலே இல்லாத சாதியுண்டா மதமுண்டா என்று கேட்டார்கள். சகோதரர்களாக சகோதரிகளாக எந்த மாச்சர்யமும் இல்லாமல் கோபமும் இல்லாமல் அத்தனை பேரும் இங்கே தமிழர்களாக மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம். ஒருவருக்கொருவர் உதவிக் கரம் நீட்டுகிறோம். அன்பு செய்கிறோம்.

### இந்துக்களை அரசியல் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள்!

ஆனால் இந்த ஒன்றியத்திலே இருக்கும் ஆட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது? தொடர்ந்து மக்களைப் பிரித்தாளும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்துக்களை, இந்து மக்களை நாங்கள்தான் காப்பாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் இந்துக்களை பாதுகாக்கவில்லை. இந்துக்களை தங்களது அரசியல் கேடயமாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தன் அரசியல் ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பான்மையாக இருக்கும் இந்து மக்களுக்காக இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். எதுவும் கிடையாது.

மாணவர்கள் படிப்பதற்கு எதுவும் செய்கிறார்களா? ஸ்காலர்ஷிப் எல்லாம் நிறுத்தியாச்சு. பெரும்பான்மை மக்களுக்கான வேலை வாய்ப்புகள் ஏதும் செய்திருக்கிறார்களா? நம் நாட்டில் சுதந்திரம் பெற்ற பிறகு இன்றுதான் அதிகம் பேருக்கு வேலையில்லாத சூழலை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதுதான் அவர்களது சாதனை. இதனால் பெரும்பான்மை இளைஞர்கள், இளம்பெண்கள் இந்துக்களாக இருப்பவர்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி விவசாயிகள், தொழிலாளர்கள் என்று எந்த துறையை சேர்ந்த மக்களாக இருக்கட்டும். அவர்களுக்கு என்று எந்த நலனையும் எந்த திட்டத்தையும் செய்ய முன்வராத ஆட்சிதான் ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சி.

### போராடிய எம்.பி.க்கள் சஸ்பெண்ட்

நான் ஒன்றே ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். யாரிடம் கேட்கவில்லை, யாரிடமும் ஆலோசிக்கவில்லை. யாரிடமும் கேட்காமல் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு எதிராக சட்டங்களை கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் அந்த சட்டங்களை எதிர்த்து மாதக் கணக்கில் போராடினார்கள். போராட்டத்திலே பலர் உயிரிழந்தார்கள். அப்போதெல்லாம் கண்டுகொள்ளாத பி.ஜே.பி. ஆட்சி, தேர்தல் வந்தபோது அந்த சட்டங்களை பின்வாங்கினார்கள். இந்த சட்டம் கொண்டு வந்த போது அதற்கு எதிராக போராடிய எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்கிறார்கள். அந்த எம்பிக்களை சஸ்பெண்ட் செய்தது தவறு என்று நாங்கள் போராடி வெளி நடப்பு செய்தபோது... அந்த நேரத்தில் தொழிலாளர்கள் நல சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

### வழக்கறிஞர்களுக்கே புரியாத – இந்தியில் சட்டம்

இந்த நாட்டிலே இருக்கும் சாதாரண சாமானிய மக்களுக்கு எதிரானது. அதேநேரம் மாநில உரிமைகளுக்கு எதிரானது. எந்த சட்டத்தை எடுத்துக் கொண்டாலும் மாநில உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கும் சட்டங்கள்தான். சென்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரிலே புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டு வந்தார்கள். அதன் பெயர் எல்லாமே இந்தியிலே இருக்கிறது. பாதி வழக்கறிஞர்களுக்கே புரியவில்லை. ஜட்ஜுகளுக்கே புரியவில்லையாம். பாதி ஜட்ஜுகள் புரியாமல்தான் இருக்கிறார்கள். என்ன செய்ய முடியும்?

இப்படிப்பட்ட சூழலிலே யாரும் இவர்களை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடாது. இவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்ட சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் எத்தனை பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதை கணக்கிட்டு சொல்ல முடியாது. அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

‘நாங்கள் ஒரு பழங்குடியினரை கொண்டு வந்து குடியரசுத் தலைவராக வைத்திருக்கிறோம்’ என்று பெருமையாக சொல்கிறார்கள். ஆனால் அவரை புதிய நாடாளுமன்றம் தொடங்கும்போது அழைக்கவில்லை. அப்புறம் கோயில் திறந்தார்கள், அங்கேயும் அவருக்கு அழைப்பில்லை.

முதல் முறையாக இந்த கூட்டத் தொடரில்தான் நம்முடைய குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்படுகிறார். காரணம் வேறு வழியில்லை., அவர் உரையாற்றியாக வேண்டும். அதற்கு முன்னால் அவர்களுக்கு நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு அழைப்பு இல்லை, அனுமதியும் இல்லை. ஆனால் பழங்குடியினத்தைச் சேர்ந்தவரை குடியரசுத் தலைவராக ஆக்கியிருக்கிறோம் என்று பெருமை பேசுகிறார்கள்.

அதே பழங்குடியின மக்களுக்காக தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட கிட்டத்தட்ட 82 வயதுக்கு மேல் இருக்கக் கூடிய ஸ்டேன் சாமி என்ற பாதிரியாரை தேச விரோதி என்று சொல்லி சிறையில் அடைத்து, அவரால் தண்ணி கூட எடுத்துக் குடிக்க முடியாது. தசைகள் எல்லாம் நலிந்துவிட்டன. அந்த பிரச்சினையிலே தவித்துக் கொண்டிருந்தவரை 82 வயதில் இந்த தேசத்துக்கு எதிராக சதி செய்கிறார் என்று சொல்லி சிறையில் அடைத்தனர். அவரால் தண்ணீரை கையால் டம்ளரில் எடுத்து குடிக்க முடியாது. அவர் ஒரு ஸ்ட்ரா வாங்குவதற்கு நீதிமன்றங்களை அணுகி போராட வேண்டியிருந்தது. இதுதான் அவர்களுக்குத் தெரிந்த நீதி நேர்மை.

இந்த ஆட்சி மறுபடியும் வந்தால் நாடாளுமன்றம் நாடாளுமன்றமாக இருக்காது. ஜனநாயகம் என்பது காணாமல் போய்விடும். மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது நான் நாடாளுமன்றத்திலே இருந்திருக்கிறேன். பிரதமர் மன்மோகன் சிங் அவைக்கு வருவார். முடிந்தவரை அவையில் இருப்பார். ஏதாவது ஒரு கேள்வி எழுப்பப் பட்டால் பிரதமரே எழுந்து பதில் சொன்னதை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இங்கே இருக்கிற பீட்டர் அல்போன்ஸ் அண்ணன் பார்த்திருப்பார்.

ஆனால் இப்போதைய நம்முடைய பிரதமர் என்றைக்காவது... நாம் அத்திப் பூத்தது போல் என்று சொல்வோம் இல்லையா... அதையும் தாண்டி ஏதாவது அரிதினும் அரிதாக கிடைக்கக் கூடியதாக இருந்தது என்றால் அப்போது தான் வருவார். அவர் பேசும் நான்கு தவிர ஐந்து நிமிடத்துக்கு மேல் நாடாளுமன்றத்தில் உட்கார மாட்டார். அவர் உட்காராத காரணத்தால் இரண்டு இளைஞர்கள் தங்களுடைய கோபத்தைக் காட்டுவதற்காக, இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதற்காக பார்வையாளர் மாடத்தில் இருந்து குதிக்கிறார்கள். கால் செருப்பில் இருந்து இரு பொருட்களை எடுத்து புகையடிக்கிறார்கள். அந்த மன்றத்திலே தான் இந்த நாட்டின் முக்கியமான தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில்தான் ராகுல் காந்தி அவையிலே அமர்ந்திருக்கிறார்.

### யாருக்கும் பாதுகாப்பு இல்லை

இப்படிப்பட்ட ஒரு சூழலிலே யாருக்குமே பாதுகாப்பு இல்லையே, இது எப்படி நடந்தது என்று கேள்வி கேட்ட காரணத்துக்காக.... இந்த நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக மக்களவை, மாநிலங்களவை என இரு அவைகளிலும் இருக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்து அவையில் இருந்து நீக்குகிறார்கள்.

நாடாளுமன்ற பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி எப்படி அவர்கள் வந்தார்கள்? நல்ல பிரதமராக இருந்திருந்தால் அவர் கூட அவையிலே இருந்திருப்பார் அல்லவா? பிரதமருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் இருக்கிறதே? என்று கேள்வி கேட்டதற்காக அத்தனை பேரும் சஸ்பெண்ட் செய்யப்படுகிறோம்.

இதுதான் மறுபடியும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தினமும் நடக்கும் ஒன்றாக மாறிவிடும். கேள்வி நேரத்தில் எழுந்து கேள்வி கேட்டால் கூட சஸ்பெண்ட் செய்து விடுவார்கள்.

அதனால் இந்த நாட்டை, நாட்டின் ஜனநாயகத்தை, உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால், கல்வியை, கல்விக்கான உரிமையை பாதுகாக்க வேண்டுமென்றால்... கல்விக்கான உரிமையை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை நிறைவேற்றித் தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. இன்று பெண்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற நிலையை உருவாக்கித் தந்திருப்பது நாம்.

ஆனால் கோயிலுக்குள் பிரதமரே வர முடியாத ஜனாதிபதியே வர முடியாத சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது சாதாரணமாக இருக்கக் கூடிய சூழலாக மாறும்,

ஒடுக்கப்பட்டவர்கள் மறுபடியும் ஒடுக்கப்படுவார்கள். உங்கள் கைகளில் இருக்கும் உரிமைகள் எல்லாம் தட்டிப் பறிக்கப்படும். புதிய கல்விக்கொள்கை என்பது நம் பிள்ளைகள் எந்த கல்லூரிக்கு போக வேண்டும் என்றாலும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். நீட் தேர்வு மூலம் நம் பிள்ளைகள் மருத்துவம் பயில முடியாமல் தடுப்பவர்கள், நம் பிள்ளைகள் கல்லூரிக்கு போய் படிக்க முடியாத சூழலை உருவாக்குவார்கள்.

### அடிமை நிலையை உருவாக்க நினைக்கிறார்கள்!

முன்பு அடிமைகளாக இருந்த நிலையை மீண்டும் உருவாக்க நினைக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கே அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் பேசும்போது ராமராஜ்யம் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். இவர்கள் உருவாக்கும் ராம ராஜ்யம் என்பது யாருக்கும் எந்த உரிமையும் அற்ற மோடி ராஜ்யமாக ஆர்.எஸ்.எஸ். ராஜ்யமாகவே இருக்கும். பஜ்ரங் தள் ராஜ்யமாகவே இருக்கும்.

தமிழ்நாட்டில் நம்முடைய கனவு என்பது பெரியார் ராமசாமி ராஜ்யம். அதை நாடு முழுதும் உருவாக்கிக் காட்டுவோம்”.

இவ்வாறு தனது உரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி அமிர்தராஜ், ஆளூர் ஷானவாஸ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

---

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. கலை மற்றும் இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

## மாணவ-மாணவிகள் பங்கேற்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு!

விருதுநகர், பிப். 8 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விருதுநகர் வடக்கு மாவட்டம் தி.மு.க. கலை மற்றும் இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்கும் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி விருதுநகரில் வருகின்ற 10.02.2024 சனிக்கிழமை விருதுநகர் காலேஜ் ரோட்டில் அமைந்துள்ள தங்கம்மாள் பெரியசாமி நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலை 9 மணி முதல் நடைபெறுகின்றது. பரிசு வழங்கும் நேரம் மாலை 4 மணி.

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், திருவாரூர் அர.திருவிடம் தலைமை வகிக்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு சேர்மன் சுப்பாராஜா, டி.வனராஜா, சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், விருதுநகர் நகர மன்ற தலைவர் எஸ்.ஆர். எஸ்.ஆர்.மாதவன், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி ராஜசேகர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த நிகழ்விற்கு வரவேற்புரை மலைராசன், வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சந்திரபாபு, துணைத் தலைவர் நிகழ்ச்சியை நடத்துகின்றனர் மற்றும் கலந்து கொள்பவர்கள் விவரம் சிவகாசி மாநகர செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன், திருச்சுழி எஸ். பொன்னுத்தம்பி, காரியாபட்டி கிழக்கு எம். செல்வம், காரியாபட்டி மேற்கு கே.கண்ணன், நரிக்குடி டி.கண்ணன், திருச்சுழி வடக்கு எம்.சந்தானபாண்டியன், சிவகாசி வடக்கு எஸ். தங்கராஜா, சிவகாசி தெற்கு வ.விவேகன் ராஜா, விருதுநகர் ஆவுடையம்மாள், கோபி கண்ணன், மல்லாக்கிணறு பேரூராட்சி எம். முருகேசன், காரியாபட்டி பேரூராட்சி ஆர்.கே.செந்தில், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் வி.எஸ்.ஸ்ரீனிகா, ஆ.சந்திரபாபு, வாலை முத்துசாமி, மயிலை முத்துச்சாமி, துப்பணூர் சங்கரபாண்டியன், ச.மருத நாயகம், விளையாட்டு மேம்பட்டு அணி கே.ஜி.ராஜகுரு, மாவட்ட வர்த்தக அணி கே.போஸ் என்ற ஜெயச்சந்திரன், இளைஞர் அணி ஆர்.கிருஷ்ணகுமார், பொறியாளர் அணி எஸ்.ஆர். மதன்குமார், சிவகாசி துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன், மாணவரணி எம்.கருப்பு ராஜா, இலக்கிய அணி பிச்சைநாதன், வழக்கறிஞர் அணி எஸ்.திருநாவுக்கரசு, மாவட்டக் கவுன்சிலர் தங்கத் தமிழ்வாணன், சுற்றுச்சூழல் அணி மித்ரு நாகேந்திரன், அருப்புக்கோட்டை சிவபிரகாசம் சுந்தரர் லட்சுமி, அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே.மணி, இளைஞர் அணி பாபுஜி, மாநில நெசவாளர் அணி பழனிச்சாமி, நகர அவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், துணைச் செயலாளர்கள் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், மரியராசு, அமைப்பு சாரா ஓட்டுநர் எல்.திருமாறன், விவசாய அணி நேஷனல் ராமர், வைகுந்தம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு நன்றியுரை நகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் ஆற்றுகின்றார். இந்த நிகழ்ச்சி ஏற்பாடு விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நடத்துகின்றது.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தாலுகா ஓமந்தூர் ஊராட்சியில் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் துரை.ரவிக்குமார் எம்.பி., மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணைச் சேர்மன் பழனி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார் உள்ளனர்.

---

விழுப்புரத்தில் புத்தகத் திருவிழா தொடங்கியது!

## அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!


விழுப்புரம், பிப். 8 -

விழுப்புரம் நகராட்சி திடலில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் புத்தக திருவிழா துவக்க விழா நடந்தது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு புத்தக கண்காட்சியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில வளர்ச்சிக்கும், ஏழை, எளியமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதால் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. மேலும் அறிவார்ந்த சமுதாயத்தினை உருவாக்கிடும் வகையிலும், சாதி, மதபேதமின்றி சமுதாயத்தினை உருவாக்கிட வேண்டும் என்றால் கல்வியறிவோடு சமூக சீர்திருத்த கருத்துக்களை பொதுமக்கள், மாணவ, மாணவிகளிடையே ஏற்படுத்திடும் வகையில் தமிழ்நாடு முழுவதும் புத்தகத் திருவிழா வினை நடத்திட உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் மாணவ, மாணவிகளிடையே பல்வேறு தலைப்புகளில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் ஏற்படுவதோடு, மாணவர்கள் நூலகங் களுக்குச் சென்று புத்தகங்கள் வாசிக்கும் பழக்கமும் உருவாகும். இந்த புத்தகத் திரு விழா வரும் 11ம் தேதிவரை நடக்கிறது. 96க்கும் மேற்பட்ட பல்வேறு தலைப்புகளில் புத்தகஅரங்குகள், 5துறை சார்ந்த அரங்குகள், 1 உள்ளூர் படைப்பாளி களின் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், சிறுதானியங்களால் செய்யப்பட்ட உணவு அரங்குகள், துறைசார்ந்த கண்காட்சி அரங்குகள், உள்ளூர் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெற உள்ளது. அரசு போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளதால் போட்டி தேர்விற்கு தயாராகு பவர்கள் இதனை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். மாணவர்கள் பள்ளி புத்தகத்தோடு பொது அறிவினை வளர்க்கும் புத்தகங்களையும் படித்திட வேண்டும். புத்தகத் திருவிழாவில் பல்வேறு தலைப்புகளின்கீழ் புத்தகங்கள் இடம்பெற்றுள்ளதால் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்திற்கேற்ற புத்தகத்தினை தேர்வுசெய்து படித்து தங்கள் அறிவாற்றலையும், பொது அறிவினையும் வளர்த்துகொள்ள வேண்டும். அறிவை வளர்க்கும் புத்தகங்களை தேர்ந்தெடுத்து படித்து திறனை வளர்த்துக்கொள்ளுங்கள் நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றிகிடைக்கும். உலகம் உங்களை உற்று நோக்கி பாராட்டும் நிலை உருவாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக்சிவாச், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், ஒன்றிய சேர்மன்கள், சச்சிதானந்தம், வாசன், மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா, தென்னிந்திய புத்தக பதிப்பாளர் சங்கத் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (06.02.2024) உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள புதிய மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் பல்வேறு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





ஸ்பெயினிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து இல்லம் வரை வழிநெடுக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்ட காட்சி!



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### பாவாணரின் தமிழ்த் தொண்டைப் போற்றி


# தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம்!

## தேவநேயப் பாவாணர் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 8-**

**பாவாணரின் தமிழ்த் தொண்டைப் போற்றி, தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம் என்று தேவநேய பாவாணர் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



நாம் செல்லும் தமிழ்வழிப் பயணத்துக்கு ஊக்கமளித்திட்ட திராவிட மொழிநூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாள் இன்று!

ஆழமான தமிழறிவும் அசைக்க முடியாத இன உணர்வும் கொண்ட தமிழ்ச்சீயம் பாவாணர் எனத் தலைவர் கலைஞர் அவரது புகழ் பாடினார்!

பாவாணரின் தமிழ்த்தொண்டைப் போற்றி, தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.







பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.



# இடம் பொருள் கலைஞர் 56





# கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்!

## சென்னையின் தாகம் தீர்த்த சாதனை

*1996 அக்டோபர் 16-ஆம் தேதியிட்ட ‘தமிழரசு’ இதழ் வெளியிட்ட கட்டுரைகளில் ஒன்று இப்படி ஆரம்பிக்கிறது:*

*“சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள், திரைப்படங்களில்கூடக் காட்டுவதற்கு யோசிக்கப் போகிறார்கள். சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட்களுக்கு மேலும் தங்கமுடியும்!”*

*படிக்கும்போதே விந்தையாக இருக்கிறது அல்லவா? சென்னைக்கு 90 களில் இப்படி ஒரு முகம் இருந்தது என்பது, இன்று வரலாறாகிவிட்ட தகவல். அதற்கு முக்கிய காரணம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.*

### எல்லீஸ் யோசித்த திட்டம்

*உலகில் லண்டனுக்கு அடுத்து, மாநகராட்சி அமைந்தது சென்னையில்தான். அந்தச் சென்னை மாநகரத்துக்கென்று நிறையப் பெருமைக்குரிய விஷயங்கள் உண்டு. ஆனால், வெகுகாலம் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்தது.*

*1881-இல் சென்னை நகரம், சுமார் 5 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. அன்று நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்கு, சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக இருந்த கர்னல் டபிள்யூ.எம்.எல்லீஸ் என்பவர், கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குத் திருப்பிவிடத் திட்டமிட்டார். ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.*

*அதன் பிறகு, 1947-1953 காலகட்டத்தில், கிருஷ்ணா-பெண்ணாறு நதித் திட்டம் என்ற பெயரில், ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ‘கோஸ்லா ஆணையம்’, இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது.*

### முதல் குரல்... முதல் கடிதம்..!

*பிறகு 1961 வாக்கில், ஒன்றிய அரசின் ‘குல்காட்டி ஆணையத்திடம்’, விவசாயிகள் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை தமிழ்நாடு அரசு விடுத்தது. அந்தக் கோரிக்கைக்காக ஒன்றிய அரசை தமிழ்நாடு வலியுறுத்திக்கொண்டிருந்த நிலையில், 1963 ஆம் ஆண்டு, ‘மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன’ என்று மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.*

*ஆனால், அந்த முயற்சியும் கைவிடப்பட்ட நிலையில், 1969 ஏப்ரல் மாதம், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம், கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை, என்ற ஒரு காரணத்தைச் சொல்லி தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு, ‘இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் தர வேண்டும்’ என்று கூறியது. அந்த நேரத்தில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும்’ என்று அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எழுப்பியதுடன், இதுதொடர்பாக, முதல் கடிதத்தையும் ஒன்றிய அரசுக்கு எழுதினார்.*

*அதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டுப் பிப்ரவரியில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்குவது பற்றி அறிவித்தார். அதன் பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட, ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.*

### வட்டியும் ‘இன்ட்ரஸ்ட்’டும்

*இந்நிலையில், 1983-இல் சென்னையில் ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்க, அந்த ஆண்டு ஏப்ரல் 27 அன்று தமிழ்நாடு அரசும், ஆந்திரா அரசும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தின. அதுதான் தமிழ்நாட்டில், ‘கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்’ என்றும், ஆந்திராவில் ’தெலுங்கு கங்கைத் திட்டம்’ என்றும் அழைக்கப்படுகிறது. 1985 வரை, ஆந்திராவுக்கு 47 கோடி ரூபாயை தமிழ்நாடு வழங்கியபோதும், அந்தத் திட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை.*

*பிறகு 1989-இல் கலைஞர் அரசு அமைந்தவுடன், அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி.ராமாராவை சந்தித்து, கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து 1990 ஜூலை வரை, மொத்தம் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்துக்காக ஆந்திர அரசிடம் வழங்கினார்.*

*அப்படியான ஒரு சந்திப்பின் போது, பத்திரிகையாளர்களிடையே கலைஞர் பேசும்போது, “அவர்கள் (அ.தி.மு.க) 3 ஆண்டு காலமாக எந்தப் பணமும் கொடுக்கவில்லை. இப்போது நாங்கள் 60 கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறோம். 92-93 ஆம் ஆண்டிற்குள், திட்டமானது முடிவடையக் கூடிய விதத்தில் மீதித் தொகையும் தரப்படும். 3 ஆண்டுக்கான பாக்கியை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று என்.டி.ஆர். வற்புறுத்தாததற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையாகும்” என்று சொன்னதும், பத்திரிகையாளர் ஒருவர், “பாக்கிப் பணம் ‘இன்ட்ரஸ்ட்’ (வட்டி) உடன் தரப்படுமா?” என்று கேட்க, அதற்கு கலைஞர், “இந்தத் திட்டம் மக்களின் ‘இன்ட்ரஸ்ட்’ (நன்மைக்காக) உடன் செய்யப்படுகிறது” என்றார்.*

*இந்நிலையில், 1991 கலைஞர் அரசு கலைக்கப்பட, அதற்குப் பிறகு வந்த அரசு எந்த நடவடிக்கையும் இதில் எடுக்கவில்லை. மீண்டும் 1996-இல் கலைஞர் அரசு அமைந்ததும், அன்றைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.*

*அதன் பலனாக, 1996 செப்டம்பர் 29 அன்று, ஆந்திரா எல்லையைக் கடந்து, தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் கிராமத்துக்குக் கிருஷ்ணா நதி வந்தடைந்தது. சென்னையின் தாகம் தணிந்தது!*

**...வலம் வருவோம்**

### திராவிட கங்கைத் திட்டம்!

என்.டி.ஆர் உடனான பேச்சுவார்த்தை முடிந்து, அவருடன் கலைஞரும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, “இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்தில் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இதற்குப் பெயர் தெலுங்கு கங்கைத் திட்டம் என்றிருந்தாலும், ‘திராவிட கங்கைத் திட்டம்’ என்பதே மிகவும் பொருத்தமானதாகும்” என்றார் கலைஞர்.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த, 2006-ஆம் ஆண்டு, ‘தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும்’ என்று அன்றைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு கடிதம் எழுதினார் கலைஞர். ஆனால், கண்டலேறு கால்வாய் பழுது பட்டிருந்தது. எனவே, ஆந்திர மாநிலப் பகுதியில் அதைச் சீரமைக்க, புட்டபர்த்தி சாய்பாபா நிதி உதவி வழங்கினார். அதற்காக 2007-இல் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார் கலைஞர்.

### நம்பிக்கை பிறக்கிறது!

ஒவ்வொரு விளிம்புநிலை சமூகங்களுக்கும் பார்த்துப் பார்த்து இட ஒதுக்கீட்டைப் பரவலாக்கியவர் கலைஞர். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனிப்பிரிவை உருவாக்கியது, அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீடு, கொங்கு வேளாளர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது, கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது என கலைஞர் படைத்த சாதனைகள் ஏராளம்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உரிமையை கலைஞர் நிலைநாட்டினார் என்றால், இப்போது கழகத் தலைவரோ அகில இந்தியாவுக்குமான இட ஒதுக்கீடு உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறார். மருத்துவ உயர்படிப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய இட ஒதுக்கீட்டைச் சட்டப் போராட்டத்தால் சாத்தியப்படுத்தியவர் நமது தலைவர். நமது தலைவரால் 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே பிரதமர் வேட்பாளராக அடையாளங் காட்டப்பட்ட ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு வலுசேர்க்கும் வகையில் பேசியிருப்பது நம்பிக்கை தருகிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - **‘இந்தியா கூட்டணி’** வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால், சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், இட ஒதுக்கீடு உச்ச வரம்பு 50 சதவிகிதம் என்ற தடை தகர்க்கப்படும் என்றும் ராகுல் காந்தி உறுதியளித்திருக்கிறார். இதன் மூலம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு அவரவர் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு வருங்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

பெரியார் ‘சுயமரியாதை இயக்கம்’ கண்டு நூறாண்டுகள் நெருங்கிவரும் தருவாயில், ராகுல் காந்தி அளித்திருக்கும் நம்பிக்கை காலப் பொருத்தமானது. இட ஒதுக்கீட்டை அழிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் ஆட்சிக்கு வேட்டுவைக்கப் போவதும் கூட..!

### ஃப்ளாஷ்பேக்



### ஓய்வில் சந்திப்பு!

1986-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் இளைஞர் அணி நிகழ்வுகளில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் கலந்துகொண்டார். பிறகு, பொன்னமராவதி பயணியர் விடுதியில் ஓய்வெடுக்க வந்தார். அவரை சந்திக்க ‘சிறுகதை மன்னர்’ எஸ்.எஸ்.தென்னரசு, எங்களை அழைத்துச் சென்றார். அப்போதைய பொன்னமராவதி ஒன்றிய பெருந் தலைவர் ஆலவயல் சுப்பையா தலைமையில் நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், எனது நண்பர்களுடன் தளபதியை சந்தித்தபோது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!



மீனாட்சி சுந்தரம்

**-சே.மீனாட்சி சுந்தரம்,**
**2-வது வார்டு செயலாளர்,**
**பொன்னமராவதி பேரூராட்சி,**
**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### கலைஞரை பேட்டி கண்ட பிராவ்தா!

**1966-ஆம் ஆண்டு கோபாலபுரம் இல்லத்தில் வைத்து, கலைஞர் கொடுத்த ஒரு பேட்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளிவந்த ‘பிராவ்தா’ ஆசிரியர் குழுவினர் நேரில் வந்து கலைஞரிடம் பேட்டி கண்டனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீண்ட அப்பேட்டியில் சமதர்மம், மொழிக் கொள்கை குறித்தெல்லாம் சுவாரசியமான பதில்களை அளித்தார் கலைஞர். வரலாற்றில் தனித்துவமான நேர்காணல் அது.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 382




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131